Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 22 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 24 (07.12.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:67

FedEx Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax. 021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

## இடைக்கால யோசனை குறித்த பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியும்!

### அரச வானொலி பேட்டியில் தமிழ்ச்செல்வன்



(கொழும்பு)

"இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியின் ஒரு கட்டமாக - விடுதலைப் புலிகளால் கையளிக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை ஒரு வரைபேயன்றி - இது ஒரு நிபந்தனையோ அல்லது இறுதியான முடிவோ அல்ல.

"இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையில் நிராகரிக்கக்கூடிய அம்சங்கள் ஏதும் இருக்குமானால் அவை தொடர்பாகப் பேசித் தீர்க்க முடியும்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிங்களசேவையில் சுபாரதி நிகழ்ச்சிக்கு பேட்டியளித்தபோது தெரிவித்தார்.

நேற்று வழங்கிய இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

"வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக சேதமடைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரக்கூடிய நிலைமை - போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இதுவரை உருவாக்கப்படவில்லை. இது இயல்பு நிலையை ஏற்படுத்த முக்கிய தடையாக உள்ளது.

"இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வொன்று காண்பதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்பதால்தான் அவசர, மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாகக் கட்டமைப்பொன்று உருவாக்கப் படவேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா வழங்கிய கரேஜஸ் கப்பல் அடுத்த மாதம் வரும்!

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைக்கென அமெரிக்காவிடம் கொள்வனவு செய்யப்பட்ட கரேஜஸ் போர்க் கப்பல் அடுத்த மாதம் 9 ஆம் திகதி இலங்கை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து புறப்படும் இந்தக் கப்பல், பசுபிக் மற்றும் இந்து சமுத்திரங்களினூடாக இலங்கையை வந்தடையும் .

இந்தப் போர்க் கப்பலை அமெரிக்காவில் பயிற்சி பெற்ற - இலங்கைக் கடற்படை மாலுமி ஒருவரே செலுத்திவரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கரேஜஸ் கப்பல் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதில் அதிகாரிகளால் இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட சீனத் தயாரிப்பு ஆயுதங்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகள் யுத்தத்தை தொடங்குவார்களா?

# அறிவதில் ஜனாதிபதி சந்திரிகா ஆர்வம்!

### நோர்வே பிரதிநிதிகளுடன் தொலைபேசியில் பேச்சு



(கொழும்பு)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் நாள் உரையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவும், புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பார்களா என்றும் நோர்வே அனுசரணையாளர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா விசாரித்ததாகவும் – இதன் பின்னரே சமாதான முயற்சிகள் தொடர்பாக அரச தரப்பின் உத்தியோகபூர்வ பதிலைப் பெற்றுக்கொள்வதற்காக எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்பு வரவிருப்பதாகவும் தெரியவருகிறது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

மாவீரர்நாள் உரையைக் கேட்டுவிட்டு கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துடன் தொடர்புகொண்ட ஜனாதிபதி சந்திரிகா – தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது உரையில் சண்டையை மீள ஆரம்பிக்கப்போவதாகக் கூறியுள்ளாரா? அப்படியேதும் சூசகமான தகவல்கள் ஏதும் அதில் உள்ளதா என்று கேட்டுள்ளார்.

(12 ஆம் பக்ம் பார்க்க)

## சவூதியில் அமெரிக்க தூதரகம் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

### இலங்கையரும் பாதிப்பு



சவுதியின் ஜெட்டா நகரில் அமைந்துள்ள அமெரிக்க அலுவலகம் மீது இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் நேற்று நடத்திய தாக்குதலில் ஒரு இலங்கையர் காயமடைந்ததுடன், தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்ட 18 பணயக் கைதிகளில் 4 இலங்கையரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க கவுன்சிலர் அலுவலகம் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த அலுவலகத்தின் பிரதான வாயில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உறக்கத்திலிருந்த 2 பெண்கள் கத்தியால் குத்திப் படுகொலை!

### முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் சம்பவம்

(கிளிநொச்சி)

நள்ளிரவு வீட்டில் உறக்கத்தில் இருந்த வேளை இனந்தெரியாதோரின் கத்திக்குத்துக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதுடன், ஒருவர் ஆபத்தான நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சண்முகராசா இராசலட்சுமி (வயது 53), இவரது தாயார் வள்ளியம்மை (வயது 73) ஆகியோர் உயிரிழந்ததுடன் ஆறுமுகம் சண்முகராசா (வயது 70) என்பவர் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு உறக்கத்தில் இருந்தவேளை வீட்டினுள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் இவர்களைக் குத்திவிட்டு தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை அயலவர் சம்பவ வீட்டினுள் சென்றவேளை இருவரும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர். காயமடைந்தவரை உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்த்தனர். புதுக்குடியிருப்பு நீதிமன்ற நீதியாளர் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

புதுக்குடியிருப்பு காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# மாவீரர் நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

தனியார் போக்குவரத்து சேவை சங்கங்களின் ஒன்றியம் மாவீரர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, நாடகம் மற்றும் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோரின் விபரங்களை சங்கம் வெளியிட்டுள்ளது.

பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று இடத்தினையும் பெற்றவர்களின் விபரம் வருமாறு -

**நாடகப்போட்டி**

1ஆம் இடம் - கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள். நாடகத் தலைப்பு 'முகம் தெரியா முகங்கள்'

2 ஆம் இடம் - திருநகர் கல்வி மறுமலர்ச்சிக் கழகம். நாடகத் தலைப்பு 'பிம்பங்கள்'.

**கட்டுரைப் போட்டி**

1ஆம் இடம் - துளசி கந்தசாமி, 30/29, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.

2ஆம் இடம் - சந்திரகுமார் வசந்தகுமார் மத்திய கல்லூரி, கிளிநொச்சி.

3 ஆம் இடம் - பெருமாள் ஷோபநிதி, கூழாங்கூடல், அளவெட்டி.

**கவிதைப் போட்டி**

1 ஆம் இடம் - டொக்டர் ச.முருகானந்தன், அரசவைத்தியசாலை - முழங்காவில்.

2ஆம் இடம் - வி.பானு, உடையார்கட்டு.

3ஆம் இடம் - கி.இராசு, உடையார்கட்டு.

**சைக்கிள் ஓட்டப்போட்டி**

1ஆம் இடம் - க.லோகேஸ்வரன், காளிகோவிலடி - கொக்குவில் மேற்கு.

2ஆம் இடம் - து.ரஜீம் சாந்தை பண்டத்தரிப்பு.

3ஆம் இடம் - ந.ஜெயசுதன் அராலி மேற்கு.

## நோர்வே நிதியுதவியுடன் கோப்பாயில் கருத்தரங்கு

நோர்வே நாட்டு நிதியுதவியுடன் றீடோ நிறுவனம் நடாத்தும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கு கோப்பாயில் நடைபெற்றது.

றீடோ நிறுவன இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழவில் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சிவஞானசுந்தரம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் சிவகடாச்சரம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்.

கோப்பாய் கோட்ட பாடசாலை மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியுற்று காணப்படுகிறது. மாணவர்கள் முயற்சியுடன் கற்று இந்தக் கோட்ட கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும.

கடந்த 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதிவரை நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். இந்தக் கருத்தரங்கை வளநிலைய ஆசிரியர்கள் மேற்கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை ஒப்படைக்கக் கோரிக்கை

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பகுதிகளில் தற்போது பெய்துவரும் கடும் மழையினால் ஏற்பட்ட அழிவுகள் பற்றிய விபரங்களைச் சேகரித்துத் தருமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ரி.சத்தியசீலன் கிராம அலுவலர்களைப் பணித்துள்ளார்.

தற்போது பெய்துவரும் கடும் மழை, காற்று மற்றும் போர்அனர்த்தங்களால் மீளக்குடியமர்ந்த இப் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் பொருட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் வடமராட்சி கிழக்கு கிராம அலுவலர்களுக்கு உதவி அரச அதிபர் இப்பணிப்புரையை விடுத்துள்ளார். (14)

## மூன்றாம் தவணை முடிவதற்கு முன்னர் இலவச பாடப்புத்தகங்களை வழங்குக

### யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்.வலயத்திற்கு 2005ம் ஆண்டிற்கான ஒரு தொகுதி இலவச பாட நூல்கள் வந்துசேர்ந்துள்ளன. மிகுதி நூல்கள் இந்த மாத இறுதிக்குள் வரவிருக்கின்றன.

இதுவரை வந்துள்ள நூல்களில் யாழ்.கோட்டத்திற்கு 50 வீதமான இலவசப் பாடநூல்களும், நல்லூர், கோப்பாய் கோட்டங்களுக்கு 25 வீதமான நூல்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நூல்கள் கோட்டக் கல்வி அலுவலர் ஊடாக இன்று முதல் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. எனவே பாடசாலை அதிபர்கள் இன்றைய தினமே பாடப்புத்தகங்களைப் பெற்று 3ம் தவணை முடிவடைவதற்கு முன்னர் மாணவர்களுக்கு விநியோகிக்குமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அரசாங்க அறிவித்தல்

## கூறுவிலை கோருதல்

யாழ் மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு விநியோகிப்பதற்கு கீழ்குறிப்பிடப்படும் பொருட்களை வழங்குவதற்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| No | Item | | No | Item | |
|---|---|---|---|---|---|
| 1 | Flat walker | | 26 | Stop Watch | |
| 2 | Rowing Machine | | 27 | Volley ball Post | |
| 3 | Wall bar set (with bench) | | | Model A (With a Rachet) | |
| 4 | Stationary cycle | | 28 | Net Ball Post | |
| 5 | Hip Rotator (Twister) | | | Model A (Light Base) | |
| 6 | Mirror | 4' x 4' | | Model B (Heavy Base) | |
| | | 6' x 4' | 29 | Volley Ball Net 60 Ply | |
| 7 | Pole vault Mattress (Standard) | | 30 | Spring Board | |
| 8 | Pole Vault Uprights | | 31 | Shot Putt Ring & Stop board | |
| 9 | Pole Vault Crossbar (Alum) | | 32 | Vaulting Box | |
| 10 | Pole Vault Pole | | 33 | Time Keepers Stand | |
| 11 | High Jump Mattress (Standard) | | | 01. 08 Persons | |
| 12 | High Jump UPright | | | 02. 12 Persons | |
| | Model A (L/B) | | | 03. 16 Persons | |
| | Model B (L/B) | | | 08 Persons | |
| | Model C (H/B) | | 34 | Judges stand | |
| 13 | High Jump Crossbar (Alum) | | | 08 Persons | |
| 14 | Discus | 01 k/g | | 12 Persons | |
| 15 | Discus | 02 k/g | | 16 Persons | |
| | Discus | 01 k/g | | 08 Persons | |
| | Discus | 02 k/g | 35 | Medicine Ball | 5 K/G |
| 16 | Shot - put | 04k/g | | Medicine Ball | 4 K/G |
| 17 | Shot - put | 7.26k/g | | Medicine Ball | 3 K/G |
| 18 | Javelin | 600 k/g (Hylite) | | Medicine Ball | 2 K/G |
| | Javelin | 600 k/g (Appolo) | | Medicine Ball | 1 K/G |
| 19 | Javelin | 800 k/g (Hylite) | 36 | Weight Disc. | 10 k/g |
| | Javelin | 800k/g (Appolo) | | | 7.5k/g |
| 20 | Starting Block | | | | 05k/g |
| 21 | Hurdle Mod. A (L/B) | | | | 2.5k/g |
| | Hurdle Mod. B (L/B) | | | | 01k/g |
| | Hurdle Mod. C (L/B) | | 37 | Weight Bar | 04 Feet |
| 22 | Foot Ball | | | | 05 Feet |
| 23 | Volley Ball | | | | 06 Feet |
| 24 | Netbll | | 38 | Dumbel | 10 k/g |
| 25 | Tennis Ball | | | Dumbel | 25 k/g |
| | | | 39 | Grass Cutter | |

2. மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகக் கணக்காளரிடம் செலுத்தி கூறுவிலைப் படிவங்களை 2004.12.07 ஆம் திகதி தொடக்கம் 2004.12.20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

3. கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக ரூபா.40,000.00 ரூபாவை யாழ்.மாவட்ட செயலக இலங்கை வங்கியில் செலுத்தி பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய விலைகேள்முறி ஒன்றினை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்பட்டியலை இருபிரதிகளில் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (திட்டப் பணிப்பாளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.12.20 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.

5. கூறுவிலைகள் உள்ளடக்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு எனக் குறிப்பிடல் வேண்டும்.

செ.பத்மநாதன்,
*தலைவர் / அரசாங்க அதிபர்,*
*மாவட்டகேள்விச்சபை*
*மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.*

(C/3441)


**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
(குளிரூட்டப்பட்டது)
இளைய தளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]
ஆங்கிலப்படம்
VANHELSING (நகுல படம்)
(சி-3319)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
விஜயகாந், சமீதாரெட்டி நடித்த
ராஜ்ஜியம் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
VANHELSING (நகுல படம்)
(சி-2723)

**ராஜா** யாழ்ப்பாணம்.
5 முதல் 9 வரை
சிறுவர்களுக்கான சிறந்த ஆங்கிலச் சித்திரம்.
SPIDERMAN-2
புதிய நேரம்: 10.30. இரவு 9.30. மட்டும்
ஸ்ரீகாந், சினேகா, கலாபவன்மணி நடித்த
போஸ்
புதிய நேரம்: 2.30. 6.30. மட்டும் (ரீல்ஸ்)
(சி-3319)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்

அஜித் இருவேடங்களில், பூஜா மற்றும் பலர் நடித்த
அட்டகாசம் (ரீல்ஸ்)
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)


# ஆத்ம சாந்தி கிரியை அழைப்பு



**திருமதி அன்னலட்சுமி மாணிக்கம் (செல்வநாயகம்)**

*எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.12.2004 அன்று கீரிமலையிலும், வீட்டுக்கிரியைகள் 10.12 2004 வெள்ளிக்கிழமை நடைபெறும்.*

*எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் பங்கேற்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

2 ஆம் ஒழுங்கை.
கைலாய பிள்ளையார் வீதி. சாவகச்சேரி.
தொ.பே: 0777 852077
07776171545

இங்ஙனம்
ம.குலேந்திரன் (மகன் - லண்டன்)
க.உமாமகேஸ்வரன (அழுது - மருமகன்)
சி.கந்தசாமி (மருமகன் - கனடா)


**என்றும் எங்கும் இல்லாத கொள்ளை மலிவு**

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நத்தார் பண்டிகை, புதுவருடத்தை முன்னிட்டு உங்கள்

லைடன் புடவை நிலையத்தில்

CHRIST'MAS SALE

05.12.2004 தொடக்கம் 31.12.2004 வரை

விசேடகழிவு விலையில் சகல வித ஆடைகளையும் உங்கள் எண்ணம்போல் புத்தம் புது நவீன டிசைன்களில் பெற்றுக்கொள்ள



லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 - 2381

(C/3437)

# தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இடைக்கால நிர்வாகசபையே ஒரே வழி

## கூட்டமைப்பு எம்.பி ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

**இலங்கையைப் பொறுத்தவரையில் இரண்டு நாடுகள் என்ற நிலைப்பாடு ஒன்றும் புதிதான விடயமல்ல என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தொழில் உறவு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் -

48 வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய லங்கா சமசமாசக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரண்டு மொழிகளை யுடைய ஒரு நாடு வேண்டுமா அல்லது ஒரு மொழியையுடைய இரண்டு நாடுகள் வேண்டுமா எனத் தனிச் சிங்களத்தில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு கூறினார்.

1956 ஆம் ஆண்டில் லங்கா சமசமாசக் கட்சி தமிழ் மொழிக்கு சமத்துவம் கொடுக்கப்படவேண்டியதை வலியுறுத்தியது. ஆனால், பின்னர் இந்தக் கருத்தை மாற்றிக்கொண்டு முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்துவிட்டது.

இரண்டு நாடுகள் என்ற நிலைப்பாட்டை எதிர்க்கின்ற ஜே.வி.பியினர் இந்த வரலாற்றுச் சம்பவத்தைக் கருத்திற்கொள்ளவேண்டும்.

தொழில் உறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் இரண்டு தமிழர்கள் மட்டுமே தொழில் புரிகிறார்கள். அவர்களும் சாதாரண தர ஊழியர்களாகவே இருக்கின்றனர்.

முன்னர் தொழில் அமைச்சில் நான்கு தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது எவருமில்லை.

பெரும்பாலான வேலைகள் அதாவது ஊழியர் சேமலாப நிதி செயற்பாடுகள் உட்பட அனைத்தும் சிங்கள மொழியிலேயே இடம்பெறுகின்றன.

இந்த நாட்டில் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டும் அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும் அதனை அரசாங்கம் அமுல்படுத்தவில்லை.

இதனால் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் ஊழியர்களது சேமலாப நிதி வழங்கப்படாது கிடப்பில் உள்ளது. தொழிற்துறை அமைச்சில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இன்மையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பிரதித் தொழிற்துறை ஆணையாளராக சிங்களவர் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பிலிருந்தே செயற்படுகிறார். இவர் ஒரு போதும் வடமாகாணத்துக்கு விஜயம் செய்ததில்லை.

இந்த நிலையில் அவர் எவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறை விவகாரங்களை அபிவிருத்தி செய்யமுடியும்? எதற்காக வடக்கு-கிழக்கில் உள்ள ஒரு தமிழரை இந்தப் பதவிக்கு தொழில் அமைச்சர் நியமிக்கக்கூடாது?

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கான ஆட்களைச் சேர்க்கின்ற போது, தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் பல்வேறு வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஆனால், இவற்றை நிரப்புவதற்கு தொழிற்துறை அமைச்சு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

பல்தேசியத் தன்மை வாய்ந்த இந்த நாட்டில் இவ்வாறு தமிழர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள். இதனால் தமிழர்கள் தம்மைத்தாமே அதிகாரம் செய்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டிய நிலை ஏற்படும். எந்தளவு காலத்துக்கு தமிழர்கள் இவற்றைத் தாங்கிக்கொள்வார்கள்?

எனவே இவற்றைத் தீர்க்க விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைப் பெற்றுக்கொள்வதே ஒரே வழியாகும் எனத் தெரிவித்தார்.

## சிரேஷ்ட இராணுவ அதிகாரிமீது ஊழல் மோசடி விசாரணை!

### பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

உயர் மட்ட இராணுவ அதிகாரி ஒருவர் 48 லட்சம் ரூபாவை மோசடி செய்ததான குற்றச்சாட்டு தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பனாகொடவிலுள்ள இராணுவ முகாமில் சுற்று வேலி அமைப்பதற்காக எனத் தெரிவித்து 48 லட்சம் ரூபாவை இராணுவத் தலைமையகத்தில் இருந்து இந்த சிரேஸ்ட இராணுவ அதிகாரி பெற்றிருந்தார்.

ஆனால், இராணுவமுகாமில் சுற்று வேலி அமைக்கப்படவில்லை. இது குறித்து விசாரணைகளை நடத்திவரும் பாதுகாப்பு அமைச்சு இந்த இராணுவ அதிகாரி ஒழுங்கீனங்களில் ஈடுபட்டிருப்பார் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளது.

## லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் புதிய ஆணையாளர்கள் நியமனம் தாமதம்

லஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு புதிய ஆணையாளர்களாக பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கான ஜனாதிபதியின் அனுமதி இன்னும் இரண்டு வாரங்களின் பின்னரே கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட உறுப்பினர்கள் மீது பொதுமக்களின் முறைப்பாடு வரவேற்கப்படுவதன் காரணமாக இன்னும் அந்தப் பெயர்களுக்கான அனுமதிகோரல் கோவை ஜனாதிபதிக்கு இன்னும் அனுப்பப்படவில்லை.

அண்மையில் கூடிய அரசியலமைப்புச் சபை இந்த ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களாக முன்னாள் நீதியரசர் அமீர் இஸ்மாயில், பி.எதிரிசூரிய மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஆகியோரின் பெயர்களைப் பரிந்துரைத்தது.

இந்தப் பெயர்கள் ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பப்படவுள்ள நிலையிலேயே, புதிய உறுப்பினர்கள் தொடர்பாக பொதுமக்களின் முறைப்பாடுகள் கோரப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் தற்சமயம் பல முறைப்பாடுகள் அரசியலமைப்புச் சபைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதில் மோசமான குற்றச்சாட்டுக்களும் உள்ளடங்கியுள்ளன. இந்த நிலையில் மேலும் முறைப்பாடுகள் இருப்பின் அதனைச் செயலர் அரசியமைப்புச் சபை முன்டாஸ் மஹ்றால் காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அரசியலமைப்புச் சபை கேட்டுள்ளது. (01)

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை திருமாவளவன் சந்தித்தார்!

(கொழும்பு)



நாடாளுமன்றத்திற்கு சென்ற தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிட நேரம் நாடாளுமன்ற கட்டடத்தில் உள்ள உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றது.



இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என பிரதமரிடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு எதிராக தமிழ்நாட்டில் போராட்டங்களை நடத்தப்போவதாக திருமாவளவன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

## இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிராக கொழும்பில் மாநாடு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிராக கொழும்பில் மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த மாநாடு கொழும்பிலுள்ள ஹொட்டேல் ஒன்றில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை நிறைவேற்றப்படுமானால் - அதன் மூலம் இலங்கையை பிளவுபடுத்தும் அதே நேரம் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் விளைவிக்கும் என்ற தொனிப்பொருளிலேயே இந்த மாநாடு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இதில் ஜேன்ஸ் டிபென்ஸ் வார இதழில் போல்கரிஸ் மற்றும் கனடாவின் டொரன்டோ ஸ்ரார் இதழின் ஸ்டுவட்மெல், நோர்வே நாட்டின் பாதுகாப்புத்துறை ஆய்வாளர் எம். ரொபிக் உட்பட உள்ளூர் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர். (01)

## இந்தியாவுக்குள் புலிகள் ஊடுருவும் அபாயமாம்!

### உளவுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

கருணாவின் அரசியல் செயற்பாடுகள் எனக்கூறிக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சுதந்திரமாக இந்தியாவிற்குள் ஊடுருவும் சாத்தியம் இருப்பதாக இந்திய உளவுத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்மூலம் இந்தியாவில் மீண்டும் விடுதலைப் புலிகள் ஊடுருவிச் செயற்படும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் கருணா குழுவெனக் கூறிக்கொண்டு எதிர்காலத்தில் பாரிய செயற்பாடுகளில் ஈடுபடவிருப்பதா கவும் எதிர்வு கூறப்படுகிறது.

கருணா குழுவைச் சேர்ந்த பலரும் தற்போது அவர்களின் நடவடிக்கைகளில் விரக்தியடைந்து தமது சகாக்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட வண்ணமுள்ளனர்.

இன்னும் பலர் நீண்டகால நோக்கில் அமைதியாகக் கருணா குழுவிற்குள் இருப்பார்கள். இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை இனங்காண முடியாத நிலையேற்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## லண்டனில் இயங்கி வந்த தமிழ் சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸாரால் சீல்வைப்பு!

லண்டன் - அரோவ் பகுதியில் அமைந்திருந்த பிரபல தமிழ் சட்டத்தரணிகள் நிறுவனம் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் பிரித்தானியப் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளதால், சுமார் 15 ஆயிரம் ஈழத்தமிழ் உறவுகள் நிர்க்கதியாகியுள்ளனர் என்று தெரியவருகிறது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

இந்த சட்டத்தரணிகள் நிறுவனம் பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களுக்குரிய தமிழ் சட்ட ஆலோசனைக்காக பிரித்தானிய அரசாங்கத்தால் வழங்கப்படும் பணத்தைத் தவறாகக் கையாண்டதுடன், பல மில்லியன் பவுண்களை வருமானமாக சட்டரீதியற்ற முறையில் திரட்டியதாகப் பொலிசார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிறுவனத்தில் கடமையாற்றிய ஒருவர் கொடுத்த இரகசியமான தகவலையடுத்தே இந்த நிறுவனம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவானவராகத் தன்னை இனங்காட்டிக் கொள்ளும் சட்டத்தரணிகள் நிறுவன உரிமையாளர் - தமிழ்த் தேசியத்திற்குப் பங்களிப்புச் செய்பவர் போன்ற ஒரு மாயை பலர் மத்தியில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவனத்தில் சுமார் 6 ஆயிரம் ஈழத்தமிழர்களின் அகதிகள் தொடர்பான கோவைகள் மட்டும் இருந்ததாகவும், சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களை வைத்திருந்ததாகவும், இவர் சொத்து முதலீட்டாளராகவும் அண்மைக்காலத்தில் தன்னை விஸ்தரித்துக் கொண்டவர் என்றும் தெரியவருகிறது.

தமிழ் சட்டத்தரணிகள் நிறுவனங்களில் அதிக கோவைகளை வைத்திருந்த பிரபல முதலீட்டு நிறுவனத்தின் உரிமையாளர் வடமராட்சி - கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரெனக் கூறப்படுகிறது.

இவர் தமிழ்த் தேசியத்திற்கு எந்த ஒரு சிறுபங்களிப்பையும் தனது சொந்தப் பணத்தில் செய்ய முன்வராதவர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

இந்தச் செய்தி தொடர்பாக இந்த நிறுவனத்தில் வேலைசெய்யும் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழ்த் தேசியத்திற்கு எந்தவிதமான பங்களிப்பும் செய்யாத நிறுவனம் பாரிய பங்களிப்புச் செய்ததாக ஊடகங்களில் வெளியான செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தந்ததாகவும் தெரிவித்தார்.

இவருடைய நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நிதிக் கணக்குகளில் உள்ள மிகப்பெரும் முரண்பாடுகளும் வியாபாரப் போட்டியுடன் கூடிய இனப்பாகுபாடுமே காரணம் என்று தெரியவருகின்றது.

# நான்காவது போட்டியிலும் சிம்பாப்வே அணி தோல்வி!



புலவாயோவில் நேற்றுமுன்தினம் நடந்த நான்காவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி சிம்பாப்வேயை 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் இங்கிலாந்து அணி தொடரை 4-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களான பெல் 30, பிரயார் 35 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். பின்னர் 3 விக்கெட்டுக்கள் அதிவிரைவாக சரிந்தன.

ஸ்ரரஸ் 17, பீற்றர்சன் 0, கொலிங்வூட் 5 ஓட்டங்களுக்கு வெளியேறினர். இதை அடுத்து இங்கிலாந்து அணி 26.1 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்கள் எடுதது தவித்தது.

இந்தச் சூழலில் கட்டன் மைக்கல் வோகன், ஜெராய்ன்ட் ஜோன்ஸ் இணைந்து அணியை மீட்டனர். இவர்கள் ஆறாவது விக்கெட்டுக்கு 150 ஓட்டங்கள் சேர்த்து புதிய சாதனை படைத்தனர்.

வோகன் 99 பந்துகளில் 90 ஓட்டங்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஜோன்ஸ் 80 ஓட்டங்கள் விளாசினர். இங்கிலாந்து அணி 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 261 ஓட்டங்கள் குவித்தது. இந்தக் கடின இலக்கை எட்டுவதற்கு சிம்பாப்வே அணி வழக்கம்போல திணறியது. டரன் ஹொவ் பந்துவீச்சில் மட்சிகென்யரி 10, இப்ராகிம் 0 வெளியேறினர். மசகட்ஸ்கா அதிகபட்சமாக 66 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் சிம்பாப்வே அணி 48.4 ஓவரில் 187 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி அடைந்தது.

# ஹொக்கி சம்பியன்ஸ் டிரொபி தொடர் இந்தியாவுக்கு இரண்டாவது தோல்வி

(லாகூர்)

சம்பியன்ஸ் டிரொபி ஹொக்கித் தொடரில் நேற்றுமுன்தினம் இந்திய அணி, ஹொலனடிடம் போராடித் தோல்வி அடைந்தது.

ஆறு நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிரொபி ஹொக்கித் தொடர் பாகிஸ்தானின் லாகூர் நகரில் நடைபெற்றுவருகிறது. முதல் போட்டியில் இந்திய அணி ஸ்பெயின் அணியிடம் 0-4 என்ற கோல் கணக்கில் படுதோல்வி அடைந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாவது லீக் போட்டியில் இந்திய அணி, நடப்பு சம்பியனான ஹொலன்டைச் சந்தித்தது.





இதன் பலனாக ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்தில் சந்தீப் மைக்கேல் முதல் கோல் அடிக்க இந்தியா முன்னிலை பெற்றது. இதற்கு சில நிமிடங்களில் பதிலடி கொடுத்தது ஹொலன்ட். இந்த அணியின் ஜெர்ட் ஜான் டெரிக்ஸ் 10 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கோணர் வாய்ப்பைப் பயன்படுத்தி கோல் அடித்தார்.

இந்த அணிக்கு 16 ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு பெனால்டி கோணர் வாய்ப்புக் கிடைத்தது. இம்முறை தேக் தேகிமா கோல் அடித்தார். இந்திய அணியின் மாற்று வீரரான வினய் 20 ஆவது நிமிடத்தில் கோல் அடிக்க, ஆட்டம் சமமானது. இப்படி இரு அணி வீரர்களும் மாறி மாறி கோல் அடிக்க போட்டி விறுவிறுப்பாகச் சென்றது.

இதன் பின்னர் ஹொலன்ட் அணிக்கு அடுத்தடுத்து பெனால்டி கோணர் வாய்ப்புக்கள் கிடைக்க வலுவான முன்னிலை பெற்றது. டியுன் டி நோய்ஜர் (24), காரல் கிளாவர் (34) இருவரும் தலா ஒரு கோல் அடிக்க ஆட்டத்தின் முதற்பாதியின் முடிவில் ஹொலன்ட் அணி 4-2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. முதற்பாதியில் மட்டும் இந்த அணி கிடைத்த ஆறு பெனாலடி கோணர் வாய்ப்புக்களில் நான்கை கோலாக மாற்றியது.

இரண்டாவது பாதியில் இந்திய அணியின் அர்ஜுன் ஹாலப்பா 46 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். இதையடுத்து டியுன்டி நோய்ஜர் (61) மீண்டும் ஒரு கோல் அடித்தார்.

இந்நிலையில் ஆட்டத்தின் 63 ஆவது நிமிடத்தில் இளம் வீரர் விக்ரம் பிள்ளை கோல் அடித்து அணிக்கு சிறிது நம்பிக்கை அளித்தார். ஆனாலும், இதற்கு மேல் இந்திய வீரர்களால் கோல் ஏதும் அடிக்க முடியவில்லை. இறுதியில் ஹொலன்ட் அணி வெற்றிபெற்றது.



**ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற டேவிஸ் கிண்ணத்துக்கான ரெனிஸ் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணியும் அமெரிக்க அணியும் மோதின.**

**இதில் 5 போட்டிகள் கொண்ட தொடரில் ஸ்பெயின் 3-2 என்ற அடிப்படையில் அமெரிக்காவை வீழ்த்தியது.**

**ஸ்பெயின் வீரர் கார்லஸ் மோயா அமெரிக்காவின் அன்டி ரொடிக்கை 6-2, 7-6, 7-6 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.**

# விளையாட்டு

## பெங்களூரில் நடந்த போட்டியில்

# பிரேசில் உதைபந்தாட்ட வீரர் மைதானத்தில் வீழ்ந்து மரணம்



களத்தில் கோல் அடிக்க முன்னேறிவருகிறார் கிறிஸ்டியானோ ஜூனியர்

பெங்களூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஃபெடரேஷன் கோப்பை உதை பந்தாட்டப் போட்டியில், டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் கோப்பையை வெல்லக் காரணமான பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ டெலிமா ஜூனியர் மைதானத்திலேயே மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.



ஃபெடரேஷன் கோப்பைக்கான இறுதிப் போட்டியில் கோவாவைச் சேர்ந்த டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் அணியும், கொல்கத்தாவைச் சேர்ந்த மோகன் பகான் அணியும் மோதின.

முடிவில் டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று, கோப்பையைக் கைப்பற்றியது.



டாக்டர் முயற்சிக்கும் பலன் அளிக்காமல் மரணமடைந்தார் கிறிஸ்டியானோ ஜூனியர்.

கோவா அணிக்காக ஆடிய பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ ஜுனியர் ஒவ்வொரு பாதியிலும் தலா ஒரு கோல் அடித்தார்.

முன்னதாக கோல் போட முயன்றபோது கிறிஸ்டியானோ மார்பு மீது மோகன் பகான் கோல்கீப்பர் மோதினார்.

பின்னர் 78 ஆவது நிமிடத்தில் இவர் 2 ஆவது கோலை அடித்தவுடன் மைதானத்திலேயே விழுந்து நிலைகுலைந்தார்.

உடனே அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட அவர் வழியிலேயே இறந்துவிட்டார் என மருத்துவமனை தலைமை மருத்துவர் சத்யப்பிரகாஷ் தெரிவித்தார்.

# இந்திய அணிக்குக் கொலை மிரட்டல் பங்களாதேஷ் பயணம் ஒத்திவைப்பு!

(டாக்கா)

பங்களாதேஷ் வந்தால் இந்திய கிரிக்கெட் வீரர்களை கொல்வோம் என தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணி இன்று பங்களாதேஷ் செல்ல இருந்தது. அங்கு 9 ஆம் திகதி முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் போட்டிகளிலும் பங்களாதேஷ் அணியுடன் விளையாடத் திட்டமிடப்பட்டிருந்தது. 2 ஆவது டெஸ்ட் 16 ஆம் திகதி சிட்ட ஹொங்கிலும், 26, 27 ஆம் திகதிகளில் டாக்காவிலும் நடக்கவிருந்தன.

இந்த நிலையில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு அங்குள்ள ஹர்க்த்-உல்-ஜிகாத் என்ற தீவிரவாத இயக்கம் மிரட்டல் கடிதம் அனுப்பியுள்ளது. அதில் இந்திய கிரிக்கெட் வீரர்கள் பங்களாதேஷ் வரக்கூடாது. மீறி வந்தால் மோசமான விளைவுகள் ஏற்படும். அவர்கள் தீர்த்துக் கட்டப்படுவார்கள் என்றும் அது எச்சரித்திருக்கிறது.

பங்களாதேஷில் இந்திய கிரிக்கெட் வீரர்களின் பாதுகாப்புக்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பார்வையிடுவதற்காக இந்திய உயர் இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று டாக்கா விரைந்துள்ளது.

அந்தக் குழு பங்களாதேஷில் இந்திய கிரிக்கெட் அணிக்குச் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்டறிந்து, இந்திய வெளியுறவு அமைச்சகத்திற்குத் தெரிவிக்கும். இந்திய கிரிக்கெட் அணியின் பாதுகாப்புக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருப்பதாக பங்களாதேஷ் அரசு உறுதி அளித்திருந்தாலும் இந்திய இராணுவ அதிகாரிகள் குழு தரும் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இந்திய அணி பங்களாதேஷ் செல்வது பற்றித் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**உலக லைட் வெயிட் குத்துச்சண்டை சம்பியன் பட்டத்துக்கான போடடியில் மெக்ஸிக்கோ வீரர் ஜோஸ் லூயிஸ் காஸ்டில்லோ வெற்றிபெற்றார். புளோரிடாவைச் சேர்ந்த ஜோயல் காசாமேயர் தோல்வியடைந்தார். மொத்தம் 12 சுற்றுகள் கொண்ட இப் போட்டி அமெரிக்காவின் லாஸ்வேகாஸில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.**



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வண்ணை புதிய குடியேற்ற மக்கள் மழை வெள்ளத்தால் இடம்பெயர்வு!

(வண்ணார்பண்ணை)

வண்ணார்பண்ணை - தாமரை வீதியில் உள்ள கண்ணபிரான் வயல் (கல்லப்புறா வயல்) புதிய குடியேற்றத்திட்ட மக்கள், மழை வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து அருகிலுள்ள பாலர் பாடசாலையிலும், கோவிலிலும் தங்கியுள்ளனர்.

28 குடும்பங்களைச் சேர்ந்த 120 இற்கும் மேற்பட்ட மக்கள் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தமையால் பாரதி பாலர் பாடசாலையிலும், முருகமூர்த்தி கோவிலிலும் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் அண்மையில் தற்காலிகமாக அமைத்துக் கொடுத்த தகரக் கொட்டகைகளிலும் மழைநீர் புகுந்துள்ளது.

இவர்களுக்கென இதுவரை எந்த வித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை என, இடம்பெயர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (91)

## வட்டு மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2.30 மணியளவில் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் கல்லூரி அதிபர் சபாரத்னசிங்கி தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் வ.சிவஞானபோதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (207),

# கோஷ்டி மோதலின் வழிகாட்டி கோப்பாய் பொலிஸாரால் கைது!

இணுவில் - காரைக்கால் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலுக்கு வழிகாட்டி எனக் கருதப்படும் இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் சரணடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் இரவுநேர ரோந்து நடவடிக்கையின்போது, மயிலங்காட்டுப் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை இந்த நபர்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடி தப்பியோட முயன்றவேளை கைது கைதுசெய்யப்பட்டனர்.

இந்தப் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற கோஷ்டி மோதலின் வாள்வெட்டு, குடியிருப்புகள் மீது தாக்குதல் போன்ற சம்பவங்களில் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகளின் போது தெரியவந்திருப்பதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (82)

# நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய பெயர் வளைவு திறந்துவைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சைவப்பிரகார வித்தியாலயத்தில் அலங்கார பெயர் வளைவு திரைநீக்கம் மற்றும் முறைசாரக் கல்வி மாணவர்களின் கண்காட்சி நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமையன்று வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலையின் அலங்காரப் பெயர் வளைவை நெடுந்தீவு சமாதான நீதிவான் சி.வ.சங்கரப்பிள்ளை வைபவரீதியாகத் திறந்துவைத்தார். முறைசாராக் கல்வி மாணவர்களின் கண்காட்சியைத் தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.இராதாகிருஷ்ணன் திறந்துவைத்தார்.

இதேவேளை, கிறிஸ்து பிறப்பையொட்டி நடாத்தப்பட்ட ஒளிவிழா நிகழ்வின்போது, திருப்பலியை நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். அதைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (113)

# நவாலி - சென்.பீற்றர்ஸ் வீதி மழை வெள்ளத்தால் சேதம்!

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாகப் புனரமைக்கப் படாமலுள்ள நவாலி சென். பீற்றர்ஸ் மற்றும் மாதகல் சென். செபஸ்தியார் வீதிகளில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாகப் பாரிய குழிகள் தோன்றியுள்ளன.

வலிகாமம் தென்.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட இந்த வீதிகளைப் புனரமைத்து தருமாறு அந்தப் பகுதி மக்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து இரண்டு மில்லியன் ரூபா செலவில் இந்த இரு வீதிகளையும் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புனரமைத்து உதவுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. (91)

# இயந்திரக் கோளாறு காரணமாக சமுத்திரதீபம் படகுசேவை ஸ்தம்பிதம்

தீவுப்பகுதி மக்களின் அவசர வைத்திய சேவைக்கென உருவாக்கப்பட்ட 'சமுத்திர தீபம்' என்ற அம்புலன்ஸ் படகு - சிறு இயந்திரக் கோளாறு காரணமாக கடந்த சில வாரங்களாக சேவையில் ஈடுபடாமல் குறிகாட்டுவான் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்களின் நோயாளர் சேவைக்கெனக் கட்டப்பட்டு பிரதி மாகாண சுகாதாரப் பணிமனையின் பொறுப்பிலுள்ள இந்த அம்புலன்ஸ் படகு, திருத்தவேலை காரணமாக சேவையில் ஈடுபடாமையால் தீவக மக்கள் தங்கள் அவசர மருத்துவ சேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை, அவசர மருத்துவ சேவைக்கென உருவாக்கப்பட்ட அம்புலன்ஸ் படகின் வேகம், ஏனைய படகுகளின் வேகத்தைவிடக் குறைவானதாக இருப்பதால், இது தொடர்பாகவும் மக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. (113)

# எந்திரவியல் டிப்ளோமா கருத்தரங்கு திறந்த பல்கலையில் நடைபெற்றது

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் டிப்ளோமா தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்.திறந்த பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த கலாநிதி திருமதி சிவப்பிரகாசம், விரிவுரையாளர் உதயகுமார் மற்றும் முன்னாள் பிராந்திய இயக்குநர் தில்லைநாதன் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

பொறியியல் பீடத்தைச் சேர்ந்த கலாநிதி திருமதி சிவப்பிரகாசம் இந்தக் கற்கை நெறிக்கான அடிப்படைத் தகைமைகள், திறந்த பல்கலைக்கழகத்துக்கும், பாரம்பரிய பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றியும் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து ஏனைய விரிவுரையாளர்களாலும் கற்கைநெறி பற்றிய கருத்துரைகள் வழங்கப்பட்டன. (த)

# கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் கட்டாக்காலி நாய்கள் மற்றும் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளமை காரணமாக, நோயாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் நுளம்புத் தொல்லை காரணமாக அதிகம் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் இவ்வாறான அடிப்படைப் பிரச்சினைகளை எவரும் கவனத்தில் எடுக்காத நிலை காணப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் உடன் கவனத்தில் எடுத்து, கட்டாக்காலி நாய்களை அழிப்பதுடன், நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (90)



வேலணை - ஊர்காவற்துறை பிரதான வீதி கடும் மழை காரணமாக வெள்ளத்தால் அரித்துச் செல்லப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (99)



தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிலும், கட்டடத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அருளானந்தம் உரையாற்றுவதையும், அருகில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அமர்ந்திருப்பதையும் காணலாம். (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

## வடமராட்சி கிழக்கில் இலவச வைத்திய முகாம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வடமராட்சி கிழக்கிலுள்ள இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளில் இலவச வைத்திய முகாமை நடத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு புதன்கிழமையும் வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமத்தில் காலைநேரத்திலும், பொற்பதி கிராம அலுவலர் பிரிவில் மாலை நேரத்திலும் இந்த இலவச வைத்திய முகாமை நடத்தி வருகின்றனர்.

இந்த வைத்திய சேவையால் இந்தப் பகுதி மக்கள் பெரிதும் நன்மையடைவதாகப் பயனடைந்த மக்கள் தெரிவித்தனர். (14)

## பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

கொள்கை அபிவிருத்தி திட்டமிடல், செயற்படுத்தல் அமைச்சும் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் அமைப்பு உறுப்பினர்களும் இணைந்து அரச திணைக்கள தலைவர்கள் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுக்குமான ஒருநாள் பயிற்சிப் பட்டறை இன்று யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிப்பட்டறையில்- இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி போன்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளன.

## தச்சுத் தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன

தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட சில தச்சுத் தொழிலாளர்களுக்கு தச்சுத்தொழில் உபகரணங்கள் வழங்க மூவிமெண்டோ நிறுவனம் முன்வந்துள்ளது.

நாளை மறுதினம் தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து இந்த தச்சுத் தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (207)

## புலமைப் பரிசில் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதிய சபை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் தமது பிள்ளைகள் சார்பில் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி 5 ஆம் திகதியாகும். ஒவ்வொரு புலமைப் பரிசிலும் 10 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தவை. 2500 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : பி. டாவீன் பெக்கர்
முகவரி : புங்குடுதீவு.

முதலாவது அகவையில்



பெயர் : வே.அர்ச்சனன்
முகவரி : சுவிஸ்

இரண்டாவது அகவையில்



பெயர் : பு.அபிராம்
முகவரி : அல்வாய்.

இரண்டாவது அகவையில்



பெயர் : இ.பிருந்தா
முகவரி : அல்வாய்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :---------------------

முகவரி :---------------------

பிறந்த ஆண்டு:---------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------
பெற்றோர் ஒப்பம்




# நவீன தேனீக்கள்



டைனோசர் என்ற மிகப் பழைய மிருகங்களுடைய எச்சங்களை ஆராய்ந்து செல்கின்ற பொழுது, அங்கே தேனிக்களும் காணப்படுவதாக அமெரிக்க புவியியல் கழகம் தெரிவித்திருக்கிறது. ஏறக்குறைய 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன், இத்தகைய அம்சங்கள் காணப்பட்டதாகவும், அத்துடன் தேனீக்கள் கூடுதலாகக் குளிர்காலங்களில் அழிந்து போயிருப்பதாகவும் கூறப்படுகிறது. சாதாரணமாக நவீன தேனீக்கள் 31 தொடக்கம் 34 செல்சியஸ்வரை வெப்பநிலையான காலங்களில்தான் உயிர்வாழக்கூடியவை. வெப்பநிலை இதற்குமேல் அதிகரிக்கும்பொழுது அவை இறக்கநேரிடுகின்றன. இந்த வெப்பநிலை - தேன் பெறுவதற்கும், அதைத் தேனீக்கள் சேமிப்பதற்கும் உகந்தது எனச் சூழலியலாளர்கள் கருதுகிறார்கள். ஆனால், சில தேனீக்கள் மிகவும் குறைந்த வெப்பநிலையாகிய 2 தொடக்கம் 7 செல்சியஸ் வரையும் வாழமுடியும் என்பதை நிருபித் துக் காட்டியிருக்கின்றன. இப்படியான தேனீக்கள் தட்ப வெப்பநிலைத் தேனீக்கள் என அழைக் கப்படுகின்றன. ஒப்பீட்டளவில் இவை தேனை உற்பத்திசெய்வது அதிகம் எனக்கூறப்படுகிறது. வருடம் முழுவதும் இவை தேனை உற்பத்தி செய்கின்றன. ஆனால், பழைய காலங்களில் வாழ்ந்த தேனீக்கள் ஒரு குறித்த காலத்தில் மட்டுமே தேனைச் சேமித்துவந்தன. அதற்கு முக்கியகாரணியாக அமைந்தது உண்மையில் வெப்பநிலைதான்.

# கடுங்குளிரில் நியூசிலாந்து



நியூசிலாந்தில் காணப்படுகின்ற பனிமலைகளும் மற்றும் பனிப்பாறைகளும் அந்த நாட்டுக்கு மிகவும் சிக்கலை உருவாக்கியிருக்கின்றன. வீதிகளில் காணப்படுகின்ற பனிப்பாறைகள் அடிப்பாகமாக உருகுவதால், திடீரெனப் பனிக்கட்டிகள் யாவும் பள்ளங்களுக்குள் விழுந்து, வீதிகளையெல்லாம் கடல்களாக மாற்றியுள்ளன. இது திடீர் விபத்துக்களையும் , பேரழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

விமான நிலையங்களில் விமான ஓடுபாதைகள் பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏறக்குறைய 46 வருடங்களாகப் பனிக்கட்டிகளால் மூடப்பட்டுள்ள சில பிரதேசங்கள் துருவப்பகுதி களில் ஏற்பட்டிருக்கின்ற அதாவது – அந்தாட்டிக்கா முனையில் ஏற்பட்டிருக்கின்ற சடுதியான காலநிலை மாற்றம் பனிக்கட்டிகளை உருகவைத்திருக்கிறது.

1600 கிலோ மீற்றர் நீளமான வீதி ஒன்று நியூசிலாந்து நாட்டில் முற்று முழுதாகப் பனிக்கட்டிகளால் சூழப்பட்டுள்ளது. இந்தக் கடுமையான குளிர் காரணமாக நியூசிலாந்து நாட்டை மற்றைய நாடுகள் ஒதுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஏனெனில் கடுங்குளிரும், பனிக்கட்டியும் என்றும் இல்லாதவாறு வருடக் கணக்கில் உருவாகி சிறுகச்சிறுக உருகத் தொடங்குகிறது. இதனால் எப்பொழுது இது உருகும் என்றோ? எப்பொழுது உருவாகும் என்றோ தெரியாது. நியூசிலாந்து நாட்டின் குடிமக்கள் ஏங்கிக் கொண்டுள்ளனர். காலநிலை ஆய்வாளரின் கருத்துப்படி ஆர்டிக்கைவிட அந்தாட்டிக்கா கண்டத்திலேயே அதிககுளிர் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

# இந்தியாவில் மொபைல் விளையாட்டுக்கள்



கையடக்கத் தொலைபேசிகள் வந்த நோக்கம் -தொலைத் தொடர்பை இலகுவாக்குவதற்குத்தான். ஆனால், தற்போது அவை பலதரப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவது யாவருமறிந்ததே. இந்தியாவில் தற்போது எடுக்கப்பட்ட ஆய்வுகளின்படி, மக்கள் கூடுதலாக மொபைல் தொலைபேசிகளை விடியோ விளையாட்டுக்குப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற மொபைல் தொலைபேசிகள் மிகவும் மலிவானவை. ஆரம்பத்தில் 1.4 மில்லியன் மொபைல் தொலைபேசிப் பாவனையாளர்களைக் கொண்ட இந்தியா - தற்போது 44.9 மில்லியன் பாவனையாளர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இதேவேளை இந்தப் போக்கில் போனால், இந்தியாவில் கையடக்கத்தொலைபேசி அதாவது - விளையாட்டுக்களுடன் கூடிய மொபைல் தொலைபேசியின் பாவனை 2009 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 336 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டிவிடும் எனத் தொழில் நுட்பவியலாளர்கள் கருதுகிறார்கள். இதேவேளை 220 மில்லியன் மக்கள் வரையில் மொபைல்தொலைபேசிகளை இந்தியாவில் பாவிக்கத் தொடங்கக்கூடும் எனவும் கூறப்படுகிறது. இப்படியாகப் புதிய புதிய விளையாட்டுக்களைப் புகுத்த வேண்டிய தேவை இருப்பதால், கணினி மென்பொருள் தொழில்நுட்பவியலாளர்கள் புதிது புதிதாகக் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதேவேளை, கிராமங்களுக்குக்கூட இந்தவகை மொபைல் வசதிகள் இருப்பதால், கேபிள் தொலைத்தொடர்பு பாதிக்கப்பட்டுள்ளது.

# டிஜிற்றல் வானியல் தொலைக்காட்டி



பாரம்பரியமாகக் காணப்படுகின்ற தொலைக்காட்டிகள், வானிலே காணப்படுகின்ற கோள்கள் மற்றும் நட்சத்திரங்களை அவ்வளவு தெளிவாகக் காட்டுவதில்லை. தற்போது ஒல்லாந்து நாட்டின் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்ட புதியவகை டிஜிற்றல் கருவி – மிகவும் துல்லியமான முறையில் வானியல் பொருட்களைப் பார்க்கக் கூடியவாறு அமைக்கப்பட்டடிருக்கிறது. ஏறக்குறைய இந்தக் கருவியால் 160,000 படங்ளை எடுக்கக் கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. இத்தகைய கருவிதான் இப்போது கூடுதலான செய்மதிகளில் பொருத்தப்படுகின் றது. இதன் காரணமாகச் செய்மதிகளில் பெறப்படுகின்ற படங்கள் நேரே எடுத்த படங்கள் போன்று மிகத் துல்லியமானதாக இருக்கிறது எனக்கூறப்படுகிறது. இப்படி எடுக்கப்படுகின்ற படங்கள் மிகவும் பெருப்பிக்கக்கூடியவையாக இருக்கின்றன. இதில் காணப்படுகின்ற டிஜிற்றல் அம்சங்கள் எல்லோரையும் கவரக்கூடியவையாக இருக்கின்றன. இதிலே சில சிறிய வகை அமைப்பு சாதார ணமாக வீடுகளில் வைத்தே வானத்தை நோக்கக் கூடியவாறு இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் ஐரோப்பிய நாடுகளில், எல்லா வீடுகளிலும் இத்தகைய கருவி வந்தாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை என நம்பப்படுகிறது.

# போலந்தின் மிருக வளர்ப்பு



உலகளாவியரீதியில் எல்லா நாடுகளிலும் கூடுதலாகப் பண்ணைகள் காணப்படுகின்றன. அதிலும் மிக முக்கியமாகக் கால்நடைப் பண்ணைகள் சில நாடுகளின் உணவுத் தேவையைக் கூடிய சதவீதத்தில் பூர்த்திசெய்யக்கூடியனவாக இருக்கின்றன. போலந்து நாட்டில் ஏறக்குறைய 1.2 மில்லியன் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன. அத்துடன் 35 – 40 சதவீதம்வரை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதேவேளை உள்ளூர் உணவு உற்பத்தி என்பது கூடுதலாக மிருகளின் உணவுகளிலேயே தங்கியிருக்கிறது. போலந்து நாட்டின் மிருக உணவுகளைக் கொண்டு உருவாக்கப்படுகின்ற தொழிற்சாலைகள் அதிகம் உள்ளன. பாடசாலைகளுக்கு அருகில்கூட அதிகம் தொழிற்சாலைகள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாகக் கூடுதலான பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகி, தொழிற்சாலைகளுக்குச் செல்கிறார்கள். இத்தகைய தொழிற்சாலைகளால் அங்கே நல்ல வேலைவாய்ப்பு கிடைத்தது. போலந்து நாட்டில் காணப்படுகின்ற புல் வெளிகளும், சமவெளிகளும் மிருக வளர்ப்புக்கு ஏற்றனவாக இருக்கின்றன. தற்பொழுது போலந்து நாட்டில் மெதுவாகக் கோழி வளர்ப்பும் உருவாக்கப்படுகிறது. போலந்து நாட்டின் காலநிலை மிருக வளர்ப்புக்கு ஏற்றவையாக இருப்பதுபோல், கோழி வளர்ப்புக்கும் ஏற்றதாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

# நீரிழிவு நோய்க்குப் புதிய சிகிச்சை



சர்வதேச அளவில் கட்டுப்பட்டும், கட்டுப்படாமல் இருக்கின்ற நீரிழிவு நோயால் ஏறக்குறைய 80வீதமான மக்கள் பாதிப்படைந்திருக்கின்றார்கள். தற்போது இன்சுலின் ஊசி மருந்துகூட அவ்வளவாகக் குணமாக்கல் சக்தியைக் கொண்டிருக்கவில்லை எனக் கூறப்படுகிறது. தற்போது நீரிழிவு நோய்க்குப் புதியவகைச் சிகிச்சை ஒன்றை விஞ்ஞானிகளும், வைத்தியர்களும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது கலமாற்றம். அதாவது- நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட கலங்களுக்குப் பதிலாக, வேறு கலங்களை உருவாக்குவது, இத்தகைய கலங்களைப் பெறுவது என்பது மிகவும் இலகுவான காரியமல்ல. இந்த வகையான தனித்துவமான கலங்கள் - ஒருவர் இறந்து ஒரு குறிக்கப்பட்ட செக்கன்களுக்குள் பெறப்படுதல் வேண்டும். இந்தவகைக் கலங்கள் நீரிழிவு நோய்களுக்கு மட்டுமல்ல, சிறுநீரகம் சம்பந்தமான வியாதிகளுக்கும் உகந்தது எனக் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் பசுமாடுகளிலிருந்து பெறப்பட்ட ஒருவகையான கலங்கள், மனிதர்களின் நீரிழிவு நோய்க்கு நல்ல மருந்தாகக் காணப்பட்டன. ஆனால் இவை குறித்த நோயாளிகளுக்கு மட்டுமே நல்ல விளைவைத் தரக்கூடியவாறு இருக்கின்றன. இன்சுலின் பாவித்த கூடுதலான நீரிழிவு நோயாளிகள் அதை வெறுக்கின்றார்கள். ஏனெனில் மிகவும் கூடிய பக்கவிளைவுகளை இது கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இது சிறு நீரகத்தையும் தாக்குகிறது. தற்போது கலமாற்றச் சிகிச்சைக்கு மக்கள் மத்தியில் நல்ல ஆதரவு கிடைத்துவருகிறது.

## திரை விமர்சனம்

# ட்ரீம்ஸ்



கிராமப் படங்களிலேயே மூழ்கிப்போன இயக்குநர் கஸ்தூரி ராஜாவின் வித்தியாசமான திரைப்படம் இது. இந்தமுறை மகன் தனுஷைக் கதாநாயகனாகப் போட்டுப் படத்தை இயக்கியுள் ளார்.

கல்லூரி மாணவன் தனுஷுடைய எல்லா நடவடிக்கைகளையும் ஊக்கப்படுத்தும் அப்பா ரெமிட் நடராஜன் –வித்தியாச மான பாத்திரத்தில், பெண் தியாவின் எல்லா நடவடிக் கைகளையும் கண்டிக்கும் அப்பா தலைவாசல் விஜய். தனுஷ், தியா முதலில் இருவருக்கும் மோதல் ஏற்படுகிறது. பின்பு இருவரும் நட்பாகிறார்கள். இதேவேளை கல்லூரியில் புதிதாகவரும் பாரூலை தனுஷ் காதலிக்கிறார். ஆனால், பாரூல் தனுஷைக் கண்டாலே பிடிக்காமல் ஒதுங்குகிறார். ஒரு சந்தர்ப் பத்தில் தனுஷ், பாரூல் இருவரும் ஒரு சுற்றுலாவுக்காக வெளியூர் போகிறார்கள். அங்கே பாரூல் உண் மையாகவே தனுஷிடம் தன் காதலை வெளிப்படுத்து கிறார். சுற்றுலா முடிந்து திரும்பும்போது, சந்தர்ப்ப வசமாக தனுஷ், தியா இருவரும் ஒன்று சேர்கிறார்கள்.



பின்பு நடந்ததுதான் என்ன? இதுதான் மீதிக்கதை.

திரைக்கதையில் பெரிய தொய்வு இருப்பதால் படத்தில் ஒன்றும் இல்லாததுபோல் தெரிகிறது. கல்லூரி மாணவர்களை அசிங்கமாகக் கொச்சைப்படுத்தும் பல காட்சிகளை இயக்குநர் அள்ளிவீசியிருக்கிறார். அப்படியே படம் ''துள்ளுவதோ இளமை''யைக் கொப்பியடித்துப் பல காட்சிகளை இயக்குநர் கொடுத்திருக்கிறார்.

தனுஷுடைய படங்கள் தொடர்ச்சியாகப் பெட்டிக்குள் போய்க்கொண்டிருக்கின்ற காலமிது. பாரூல் தற்கொலை செய்யும் காட்சியில் தனுஷ் அழும்போது தனுஷுக்குச் சோக நடிப்பே வராது என்பது தெரிகிறது. பாரூல் புதுமுகம் என்றாலும், நடிப்பு பரவாயில்லை. ஆனால் தியாவின் நடிப்பு பிரமாதம். பரத்வாஜின் இடையில் பாடல்களில் புதுமை இல்லை. ஒளிப்பதிவாளர் கிச்சாவுக்குச் சொல்லும்படியாக ஒன்றுமில்லை.

''ட்ரீம்ஸ்'' நனவற்ற அப்பட்டமான கனவு

–சுதர்ஷினி–

# அதிக மின்பாவனை

உலகம் முழுவதிலும் தற்போது மின்சக்தி என்பது பாவிக்காமலேயே வீணாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. சாதாரணமாக வீடுகளில் போடப்படும் மின்விளக்குகள் பாவனை நேரம் முடிந்த பின்பும், நிறுத்தப்படுவதில்லை. பழைய கால மின்விளக்குகளைவிட, தற்போது புதிய வடி வமைப்புடன் கூடிய அத்துடன், மின்சாரத்தை அதிகம் எடுக் காத சிக்கனமான மின்விளக்கு கள் சந்தையில் காணப்படுகின் றன. சி.எப்.எல். எனப்படும் மின்விளக்குகளே இப்போது அதிகம் பாவிக்கப்பட்டும், விற் பனை செய்யப்பட்டும் வருகின் றன. இப்படியான மின்குமிழ்களை உலகம் முழுவதிலும் வெற்றிக ரமாக விற்பனை செய்த பெருமை பிலிப்ஸ் கம்பனி யையே சாரும். இதேவேளை உலகம் முழுவதும் செய்யப்பட்ட மின்சக்திப் பாவனை ஆராய்ச்சி களின்படி குளிரூட்டிகளாலேயே அதிக மின்சக்தி பாவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஏனெனில் இவை தொடர்ச்சியாகப் பாவிக்கப்படுகின்றன. ஐரோப்பிய மற்றும் சுவீடன் நாடுகளில் இத்தகைய குளிரூட்டிப் பாவனை மற்றைய நாடுகளைவிட அதிகம் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் பூமியின் வெப்பநிலை அதிகரிப்புக்காரணமாக இந்தப் பாவனையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால் குளிர்ப்பிரதேசங்களில் மின்பாவனை குறைவாகத்தான் உள்ளது.



# எக்ஸ்பி வின்டோஸ்

மைக்கிறோ சொவ்ட் நிறுவனம் புதிது புதிதான மென்பொருட்களைச் சந்தைக்கு விட்டுக்கொண்டிருக்கிறது. இதனால் கணினி உலகில் பலமாறுதல்களும், வியக்கத்தக்க அம்சங்களும் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றன. வின்டோஸ் 98, 99 இதைத் தொடர்ந்து எக்ஸ்பி என்ற சிறப்பான கணினி மென்பொருள் – கணி னியின் வேகத்தை மட்டு மல்ல, அதிலே காணப்படு கின்ற பல நிகழ்ச்சிகளின் மாற்றத்தை ஏற்படுத்தவல் லது. ஆரம்பத்தில் எக்ஸ்பி ஆனது – கணினி உலகில் வெறுக்கத்தக்கதாக இருந் தது. ஏனெனில், அதில் காணப்படுகின்ற பல விடய ங்கள் வின்டோஸ் 98, 99 இதை ஒத்ததாகக் காணப் படவில்லை. இப்போது இதில் காணப்படுகின்ற அதி சிறப் பம்சம் வைரஸ்களுக்கான பாதுகாப்பு. இதன் காரணமாக கணினி உலகில் எக்ஸ்பி – எல்லா கணினி வல்லுநர்களாலும் சிபாரிசு செய்யப்படுகிறது. இதேவேளை, போலி எக்ஸ்பிக்களும் சந்தையில் உலா வருகின்றன. இவற்றுக்கான அங்கீகாரம் மைக்கிறோ சொவ்ட் நிறுவனத்தால் வழங்கப்படவில்லை. அத்துடன், இத்தகைய முறையில் பல கோட்கள் இருக்காது. இதன்காரணமாக இலகுவில் இது காணப்படுகின்ற கணினிகள் பழுதடையும் அல்லது நிறுத்தப்படும் என, கணினி ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.




# அணுவால் அசையும் உலகம்

ஐரோப்பிய நாடுகள் சிலவும், ஜப்பானும் சேர்ந்து அணு சக்தியைக் கொண்டு எரிபொருள் தயா ரிக்கும் முயற்சியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டுவருகின்றன. இதன் காரணமாக பல மில்லியன் யூரோக்களைச் சேமிக்க முடியும் எனக் கூறப்படுகிறது. கூடுதலாக பிரான்ஸ் நாட்டிலேயே அணு எரிபொருட்களை உருவாக்கக் கூடிய தன்மையுடன் கூடிய ஆராய்ச்சி, வெற்றி பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஜப்பான் நாட்டுடன் பிரான்ஸ் நாடு கூட் டாக இந்த முயற்சியில் ஈடுபடுவதைப் போன்று அமெரிக்க மற்றும் தென் கொரிய கூட்டு முயற்சியும் உருவாக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படு கிறது. ஒரு அவரை விதையளவு அணு வைக் கொண்டு 100 மில்லியன் பாகை வாயுவை உருவாக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

ஜப்பானின் உதவியுடன் பிரான்ஸ் நாட்டில் காணப்படுகின்ற அணு மிகவும் சிறப்பானதாகவும், 400 செக்கன்களில் 500 மெகா வாற்றுக்கள் சக்தியை உருவாக்கக் கூடியதாகவும் இருக்கிறது. இதன் காரணமாக எண்ணெய் நிலக்கரி போன்ற எரிபொருட்களுக்குப் பிரியாவிடை கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆனாலும் சூழல் மாசடைதல் என்ற நிலையிலிருந்து தப்ப வேண்டி யிருப்பதால், பெரும்பாலான நாடுகள் அணுசக்தி உற்பத்தி என்பதைச் சற்று அடக்கியே வாசிக்கின்றன.



# வயிற்றில் புற்றுநோய்

உடலின் எல்லாப் பகுதிகளிலும் புற்றுநோய் ஏற்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால், தற்பொழுது வயிற்றில் ஏற்படும் புற்றுநோய் கண்டறிப்பட்டுள்ளது. கொலம்பிய பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிக்குழு இதனைக் கண்டுபிடித்துள் ளது. வயிற்றில் ஏற்படும் புற்றுநோய்க்கு காரணமான கெலிக்கோ பக்ரர் பிலோரி என்ற ஒருவகையான பக்றீரியா வயிற்றில் காணப்படுகின்ற சமிபாட் டுத் தொகுதியை முற்று முழுதாக தடைசெய்யக் கூடியதாக உள்ளது.

இதேவேளை உட லில் காணப்படுகின்ற எல்லாவகையான கலன் களும், இந்த பக்றீரியா வால் அழிக்கப்படுகின் றன. ஆரம்பத்தில் இந்த நோய் வயிற்றில் வந்தா லும், போகப்போக நுரை யீரல், ஈரல் மற்றும் குடற்பகுதி ஆகியவற்றைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. புற்றுநோய்க்கு மருந்துகள் கண்டுபிடிப்பது என்பது வெற்றியளிக்காத நிலையில் உடலில் எல்லாப் பகுதிகளிலும் வருவது மருத்துவத்துறைக்கு ஏமாற்றம் தரக்கூடியதாக உள்ளது. வயிற்றில் ஏற்படும் புற்றுநோய் உடலில் எல்லாக் கலன்களின் இயக்கத்தையும் நிறுத்தக்கூடும் எனவும், இதன் காரணமாக கோமா நிலை ஏற்படக்கூடும் எனவும் கூறப்படுகிறது. சில விஞ்ஞானிகள் வயிற்றில் காணப்படுகின்ற புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கலன்களை அகற்றி, புதிய கலன்களை பிரதியீடுசெய்யமுடியுமா? என ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடையமென அபெடின் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் தெரிவிக்கி றார்கள்.



# டைம் பொம்

பொருத்தமான நேரத்தில், பொருத்தமான இடத்தில் குண்டுகளைப் பொருத்தும்பொழுது அங்கே நேரம் என்பது முக்கியமாகக் கருதப்படுகிறது. முதன் முதலில் டைம்பொம் என்பது உலக யுத்தங் களிலேயே பயன்படுத்தப்பட்டது. ஆனால் காலப்போக்கில் உள்ளூர் யுத்தங் களிலும் பயன் படுத்தப்பட்டுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கட லுக்கடியில் வைக்கப்படுகின்ற நேரக் குண்டு மிகவும் அவதானமாக வைக் கப்படவேண்டிய ஒன்று. கடந்த நூற்றா ண்டிலேயே டைம்பொம் பயன்படுத்தப் பட்டதைப் பல யுத்தங்களில் கண்டோம். 1944 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பெரிய கப்பல் ஒன்று நேரக்குண்டு மூலம் தகர்த்தப்பட்டது. தற்போது பாரிய துறைமுகங்களுக்குள் கப்பல்கள் வருவதற்கு முன்னர் அவை துறை முகங்களுக்கு அன்றி, சற்று அப்பால் சுழியோடிகள் மூலம் கப்பலுக்கு அடியில் டைம்பொம் இருக் கிறதா எனச் சோதிக்கப்படுகிறது. இதன் காரணமாகப் பாரிய துறைமுகங்கள் பலத்த பாதுகாப்புடன் இருப்பது தெரிகிறது. இப்போது வருகின்ற டைம் பாம்கள் எல்லாம் காந்த சக்தியைக்கொண்டவை. ஆதலால் கப்பல்களில் அடிப்பாகத்தில் இவற்றை இணைப்பது மிகவும் சுலபம். இதன்காரணமாகச் சுழியோடிகள் வெடிக்கமுதலே பாரிய கப்பல் களையும், துறைமுகங்களையும் பாதுகாக்கமுடிகிறது.



## வடிகால்கள் இன்மை

கிளிநொச்சி நகர்ப்பகுதிகளில் சீரான வடிகால்கள் இன்மையால், மழைநீர் தேங்கிக் காணப் படுகிறது.

இந்தப் பகுதியில் வடிகால்கள் அமைக்கப்படாமையால், மழைநீர் வர்த்தக நிலையங்களின் முன்னால் தேங்கிக் காணப்படுவதால், மக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று தேவைகளை நிறைவு செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. அத்தோடு சந்தைப் பகுதியில் உரிய முறையில் கழிவுகள் அகற்றப்படாமை, நகரின் முக்கிய பகுதிகளில் கழிவு நீர் தேங்குதல் போன்ற காரணங்களால் தொற்று நோய்கள் பரவும் அபாய நிலை காணப்படுகிறது.

## வெள்ளத்தால் பாதிப்பு

பளை - சோழன்பற்று பிரதேசத்தின் மன்னவுண்டன் கரந்தாய் கிராமங்கள் கடந்த வெள்ளியன்று பெய்த மழையால், முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் போக்குவரத்துக்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கிராமங்களின் மக்கள் தங்குவதற்கு இட வசதியின்றி அல்லலப்படுகின்றனர்.

## வைத்தியசாலையில் விடுதிகள் திறப்பு

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சிதம்பரபுரம் பிரதேச வைத்தியசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட மகப்பேற்று விடுதி, வைத்திய அதிகாரி விடுதி என்பன நேற்றுமுன்தினம் மாலை 3.00 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த திறப்பு விழா வவுனியா மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மருத்துவ சிகிச்சை

கிளிநொச்சி - வட்டக்கச்சி மருத்துவமனையில் இரத்த அழுத்தம், சலரோகம், மூட்டு வாதம் மற்றும் வலிப்பு, முட்டு போன்ற நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள் குறிப்பிட்ட தினங்களில் வட்டக்கச்சி மருத்துவமனையில் இந்த சிகிச்சை நடைபெறவுள்ளது.

# புதுக்குடியிருப்பு நுண்கலை அரங்கில் மார்கழி மாத தமிழிசை அரங்கு

முல்லைத்தீவு நுண்கலைக் கல்லூரியின் மார்கழி மாத தமிழிசை அரங்கு - எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள நுண் கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு- நவம் அறிவுக்கூட பணிப்பாளர் கலைக்கோன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வுள்ளார்.

இந்த நிகழ்வில் நுண்கலை வாய்ப்பாட்டுப் பிரிவு மாணவிகளின் இளையோர் தமிழிசை அரங்கு, கலாவித்தகர் சத்திய மோகனின் பாட்டு, நுண்கலைப் பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்ற நுண்கலை மாணவர்களுக்கான கௌரவிப்பு, சிறப்பு விருந்தினர் உரை மற்றும் சிறப்பு வாத்திய தமிழிசை அரங்கு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர் கேட்டுள்ளனர்.




## விழிப்புணர்வு கருத்தரங்கு

கிளிநொச்சி கல்வித்திணைக்களமும், போரூட் நிறுவனமும் இணைந்து நடத்தும் மாணவர்களுக்கான சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு - நாளை மாலை 1 மணிக்கு கிளிநொச்சி புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுவதுடன், தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வழங்குமாறு போரூட் நிறுவன வன்னி வெளிக்கள இணைப்பாளர் கா.சாந்தலிங்கம் கேட்டுள்ளார்.

# வவுனியா - செட்டிகுளம் மருத்துவமனையில் சிங்கள மருத்துவர் நியமிக்கப்பட்டதால் சிரமம்

(முல்லைத்தீவு)

வவுனியா - செட்டிகுளம் மாவட்ட மருத்துவமனையில் சிங்கள மருத்துவர் நியமிக்கப்பட்டமையால், அங்கு சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த மருத்துவமனை - மாவட்ட மருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்ட போதிலும், கிராமிய மருத்துவமனை போன்றே இயங்கி வருகிறது.

அங்கு கடமை புரிகின்ற மருத்துவர்களுக்கு தமிழ் தெரியாததால், சிகிச்சை பெறச செல்லும் நோயாளர்கள் சிங்கள மொழி பெயர்ப்பாளர் ஒருவரைக் கூட்டிச் செல்ல வேண்டிய நிலை காணபபடுகிறது.

தமிழ்ப் பிரதேசத்தின் மருத்துவமனைக்கு சிங்கள மருத்துவரை நியமித்துள்ளதால், இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் முதல் மருத்துவமனை ஊழியர்கள் வரை பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். அத்தோடு விசர் நாய்க்கடிக்கான மருந்து மற்றும் முக்கிய நோய்களுக்கான மருந்துகளும் இல்லாது காணப்படுகிறது.

# பாண்டியன்குள மகாவித்தியாலயத்தில் 2 வகுப்பறைகள் கையளிக்கப்படவுள்ளன

முல்லைத்தீவு-பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் அடைக்கப்பட்ட இரண்டு வகுப்பறை கட்டடத் தொகுதிகள் கையளிக்கப்படாதுள்ளன.

கடந்த 2002, 2003 ஆம் ஆண்டுகளிலும் நிகொட் திட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு வகுப்பறைத் தொகுதிகளும் இதுவரையில் பாடசாலை அதிபரிடம் ஒப்பந்தக்காரர்களால் கையளிக்கப்படாமையால் பாடசாலை சமூகம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறது.

இதற்கான காரணம் கட்டட அமைப்பு தரமற்றது என, பாடசாலைச் சமூகம் கருத்து தெரிவித்துள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த உதவுமாறு பாடசாலை சமூகத்தினர் கேட்டுள்ளனர்.

# துணுக்காய் பிரதேசத்தில் விவசாய உள்ளீடுகள் வழங்கல்

முல்லைத்தீவு - துணுக்காய்ப் பிரதேசத்தில் விவசாயிகளுக்கான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

விநாயகபுரம் கிராமத்தில் 15 விவசாயிகளுக்கு தலா 8 ஆயிரம் பெறுமதியான நெற் செய்கைக்கான உள்ளீடுகளும், 10 விவசாயிகளுக்கு தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான சிறுதானிய செய்கைக்கான உள்ளீடுகளும், 35 பயனாளிகளுக்கு தலா 2 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உள்ளீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கரும்புள்ளியான் பிரதேசத்தில் 40 விவசாயிகளுக்கு நெற்செய்கை உள்ளீடுகளும், 35 விவசாயிகளுக்கு சிறு தானியச் செய்கைக்கான உள்ளீடுகளும், 65 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட செய்கைக்கான உள்ளீடுகளும் கெயர் நிதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

# தொடர்ந்து பெய்துவரும் மழையினால் வன்னிப் பிரதேச மக்கள் பெரும்பாதிப்பு

(முல்லைத்தீவு)

வன்னிப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் மக்கள் இடம்பெயரும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 618 குடும்பங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தின் முக்கிய ஆறுகளான, அக்கராயன் ஆறு, பாலியாறு, மண்டக்கல்லாறு, குடமுருட்டியாறு உட்பட பல சிறிய ஆறுகளும் வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பிரதேசத்தின் முக்கியமான குளமான- இரணைமடுக் குளத்தில் நீர் நிரம்பி வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இடம் பெயர்ந்த மக்கள் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தொடர் மழையால் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.





இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை வலயப் பொறுப்பாளர் இராமஜெயம் ஏற்றுவதையும், மாவீரர் பெற்றோர் ஒருவருக்கு பாடசாலை உபஅதிபர் திருமதி முத்துலிங்கம் மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதையும் படத்தில் காணலாம். படம்: இராமநாதபுரச் செய்தியாளர்

# முல்லைத்தீவு தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் 6ஆம் ஆண்டு நிறைவையொட்டி ஓவியப்போட்டி

தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் ஆறாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்ட நுண்கலைக் கல்லூரியினரால் தமிழர் தாயகம் எங்கும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் 3 பிரிவுகளாக நடைபெறவுள்ளன. 12 வயதுக்குட்பட்டோர் - கீழ்ப்பிரிவிலும், 13-16 வயதுக்குட்பட்டோர் - மத்திய பிரிவிலும், 17வயதுக்கு மேற்பட்டோர்- திறந்தபோட்டியிலும் பங்குபற்றலாம்.

இந்தப்போட்டி தமிழர் தாயகம் எங்கும் மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு, போட்டி நிலையங்களில் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களிலும் வெற்றி பெறுவோருக்கு முறையே தலா ஐயாயிரம் ரூபா, மூவாயிரம் ரூபா, ஆயிரத்து ஐந்நூறு ரூபா பணப்பரிசும், பெறுமதிமிக்க சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவோர் தமது முழுப்பெயர், முகவரி, மாவட்டம், பிறந்ததிகதி, பால், (மாணவர்களானால் பாடசாலையின் பெயர்) என்பன அடங்கிய சுய விண்ணப்பங்களை தனித்தாள் ஒன்றில் தெளிவாகக் குறிப்பிட்டு, பணிப்பாளர் முல்லைத்தீவு நுண்கலைக் கல்லூரி முள்ளியவளை எனும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு முல்லைத்தீவு நுண்கலைக் கல்லூரி பணிப்பாளர் தெரிவித்தார்.

# இரணைஇலுப்பைக்குளம், காக்கையன்குளம் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையில்

மன்னார் - இரணைஇலுப்பைக் குளம், காக்கையன்குளம் ஆகிய பகுதிகளில் இதுவரையில் மக்கள் மீளக்குடியமர முடியாதுள்ளமையால், இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

1998 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ படை நடவடிக்கை மூலம் இரணை இலுப்பைக்குளம், காக்கையன்குளம் ஆகிய பகுதிகளை கைப்பற்றிய படையினர், இதுவரையில் அந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்காமையால், அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதியற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன.

கடந்த 5 ஆண்டுகளாக எதுவித தொழில் வாய்ப்புக்களும் இன்றி மடு, தட்சணா மருதமடு ஆகிய நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் இவர்கள் தங்கியுள்ளனர். பெரும் விவசாய நிலப்பகுதிகளையும், மக்கள் குடியிருப்புக்களையும் இராணுவத்தினர் உயர்பாதுகாப்பு வலயமாக நிலைகொண்டுள்ளமையால், இந்தப் பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## ஜே.வி.பியின் கடிதமும் கதிர்காமரின் விளக்கமும்

நோர்வேயின் சமாதான முயற்சிகள் குறித்து தமக்குள்ள தனிப்பட்டதும், தமிழ் மக்களுக்கு எதிரானதுமான நிலைப்பாட்டின் காரணமாக ஜே.வி.பியினர் குறிப்பாக - அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நோர்வேயின் தூதுவருக்கு எழுதிய கடிதம் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் பணிகுறித்து கொச்சைத்தனமாக குற்றம் சாட்டும் வகையிலான வார்த்தைகளை உள்ளடக்கியதாக இருந்தமையாலும், அக்கடிதத்தை 'அரசு' என்ற முறையிலேயே தாம் எழுதுவதாக அதில் குறிப்பிட்டிருந்தமையாலும், நோர்வே தரப்பினர் தமக்குண்டான அதிப்தியை வெளிப்படுத்தும் வகையில் ஜே.வி.பியின் குற்றச் சாட்டானது உண்மையில் அரசின் நோர்வே குறித்த நிலைப்பாட்டின் வெளிப்பாடா என்பதை விளக்குமாறு நோர்வே தூதரகம் கேட்டுக் கொண்டதையடுத்து, ஜனாதிபதிக்கு ஒரு கடும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளமையை நேற்றுக் குறிப்பிட்டு, இதற்கு அரசு என்ன சொல்லப்போகிறது, அல்லது ஜனாதிபதி என்ன சொல்லப்போகிறார் எனக் கேள்வியொன்றையும் எழுப்பியிருந்தோம்.

நோர்வேயின் கேள்வியின் பின்னாலுள்ள பிரச்சினைகளையும், அதன் விளைவுகளால் ஏற்படப்போகும் தாக்கத்தையும் ஜனாதிபதி நன்கு உணர்ந்தவராக, ஜே.வி.பியினரின் அதிகாரத்தனமான அத்துமீறல் மீது எரிச்சலும் சினமும் கொண்டவராக ஜே.வி.பியுடனான உறவை ஏற்படுத்தவேண்டுமென்று ஒரே அழுங்குப்பிடியாக நின்ற மங்கள சமரவீரவை அழைத்து தனது கோபத்தையும் ஆத்திரத்தையும் அவர்மீது காட்டியதாகவும் ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

அத்துடன் ஜே.வி.பியினரை அடக்கி வாசிக்கச் சொல்லுமாறு மங்களசமரவீரவுக்கு கூறிய ஜனாதிபதி, தனது ஆலோசகர்களில் ஒருவரும் வெளியுறவு அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் ஊடாக நோர்வே அரசைச் சமாளிக்கும் வேலையையும் தீவிரமாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆரம்பகாலங்களில் - அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பொறுப்பில் அமரமுன்னர் - ஐக்கிய தேசிய முன்னணி அரசு நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை ஆரம்பித்தபோது அதனை எதிர்த்தும், நோர்வேயின் சமாதானப் பணியைக் கண்டித்தும் ஜே.வி.பி., சிஹல உறுமய மற்றும் ஏனைய பேரினவாத அமைப்புகள் பேரணிகளையும், கொடும்பாவி எரிப்பு சம்பவங்களையும் நடத்தியபோது அதன் பின்னணி ஆதரவுச் சக்தியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இருந்தது என்பதை எல்லோரும் அறிவர்.

சிஹல உறுமயக்காரர் நோர்வேயின் தேசியக் கொடியை எரித்தபோது ஜனாதிபதி என்ற முறையில் அதனை கண்டிக்கவோ தடுக்கவோ முயலவில்லை. நோர்வே அரசுக்கு - எரிக் சொல்ஹெய்ம் அவர்களின் பணி மற்றும் செயற்பாடுகள் தமக்கு சந்தேகமளிப்பதாகவும் அவர் விடுதலைப் புலிகளுக்கு சார்பாகச் செயற்படுவதாகவும் குற்றம்சாட்டி அவரை அனுசரணையாளர் பணிப்பொறுப்பிலிருந்து மீள அழைத்துக் கொள்ளுமாறு கடிதம் எழுதியவர் இதே ஜனாதிபதி தான்....

பின்னர் ஆட்சி தன்கையில் வந்ததும் மீண்டும் தவிர்க்க முடியாமல் சமாதானத்தை வெறும் பேச்சுக்காகவேனும் தொடர வேண்டி, இக்கட்டானநிலை ஏற்பட்டபோது அவரை மீண்டும் அதே பணியைத் தொடர அழைத்தவரும் இதே ஜனாதிபதி தான்....

எனவே ஜனாதிபதியின் சந்தர்ப்பவாதப் போக்குக்குறித்தும், இரட்டைவேட அணுகுமுறை குறித்தும் நோர்வே அரசு அனுபவபூர்வமாக அறிந்தே உள்ளது. இப்போது ஜே.வி.பியினர் தாங்களே அரசு என்று உரிமைகோரும் தன்னிச்சைப் போக்கில் ஜனாபதியையோ, அரசிலுள்ள தனது பங்காளிக் கட்சிகளையோ ஒரு பொருட்டாகக் கருதாது நோர்வேயைக் கண்டித்து கடிதம் அனுப்பியதால் ஏற்பட்டுள்ள, தனக்குப் பாதகமான சூழலைத் தவிர்க்க ஜே.வி.பியைக் கண்டிக்கவும் அவர்களின் கடிதத்தில் உள்ள நோர்வே குறித்த நிலைப்பாட்டை அரசின் நிலைப்பாடல்ல என்று மறுக்கவும் வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

கதிர்காமர் ஊடாக ஜே.வி.பியினர் அனுப்பிய கடிதத்திற்கும் அரசுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. நோர்வே தொடர்ந்தும் சமாதான அனுசரணைப்பணியில் ஈடுபடவேண்டும் என்ற செய்தியைத் தெரிவித்துள்ளார்.

இந்த மறுப்பு மட்டும் முக்கியமல்ல... சமாதான முயற்சிகள் தொடர்பான நோர்வேயின் அனுசரணைப்பணியை அதிகார பூர்வமாக அங்கீகரித்து செயற்படவைப்பது ஜனாதிபதியா? அரசாங்கமா? என்பதை தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் உண்டு.

சமாதான முன்னெடுப்பு தொடர்பான நகர்வுகள் குறித்து தீர்மானமெடுப்பதும் அடுத்தகட்டங்கள் குறித்து முடிவெடுப்பதும் ஜனாதிபதியின் பொறுப்பில்தான் இருக்கவேண்டுமேயன்றி அதிகாரபலமற்றதும், பெரும்பான்மை பலமற்றதுமான அரசின் வசமல்ல....

எனவே இனிமேல் சமாதான முயற்சிகள் பற்றியோ, நோர்வேயின் அனுசரணை குறித்தோ கருத்து நிலைப்பாடுகளை ஜனாதிபதி தானே எடுக்கவேண்டுமேயன்றி, கூட்டணி ஆட்சியை நிர்வகிக்கும் அதன் பங்காளிக்கட்சியைச் சேர்ந்தவர்களல்ல என்பதை ஜனாதிபதி வெளிப்படையாக பிரகடனம் செய்யவும் வேண்டும்.

இல்லையேல் சமாதானத்திற்கு எதிரான, அரசுடன் ஒன்றிணைந்து நிற்கும் இனவாதக் கட்சிகள் தாங்களே அரசு என்று உரிமை கோரிக்கொண்டு ஜே.வி.பியினரைப் போன்று அறிக்கைவிடும் - அல்லது கடிதம் எழுதும் சம்பவங்கள் தொடர்கதையாகவே இருக்கும். இதனை இக்கட்டத்தில் நோர்வே உறுதிசெய்து கொள்வது அவர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் சம்பவங்கள் தொடரா திருக்க உதவும்.

# நாடும் நடப்பும்



# சூறாவளி அச்சுறுத்தல் குறித்து அதிபர்களுக்கு விசேட அறிவுறுத்தல்!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சூறாவளிவீசும் அபாயம் ஏற்படுமானால், பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவுறுத்தல் ஒன்றை வழங்கியுள்ளது.

அந்த அறிவுறுத்தலில், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எங்காவது சூறாவளி வீசப்போகிறது என உறுதிப்படுத்தப்பட்ட தகவல் கிடைத்தால், பாடசாலை அதிபர்கள் உடன் கற்பித்தல் செயற்பாட்டை நிறுத்தி பாடசாலையை மூட வேண்டும். தொடர்ந்து பாடசாலைகளிலுள்ள முக்கிய ஆவணங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பாடசாலைக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்தை துண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பெறுமதி வாய்ந்த மின்சார உபகரணங்கள், இரசாயன பதார்த்தங்களைப் பாடசாலையில் பாதுகாத்தல் இல்லையேல் வேறு பாதுகாப்பான இடத்துக்கு நகர்த்தல், பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பாக வீடு செல்ல அனுமதித்தல், இல்லையேல் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கவேணடும் ஆகிய நடைமுறைகளை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள அலுவலகங்கள் அனைத்தும் மேற்கொள்ளவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சூறாவளியால் மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட்டு, பாடசாலைகளில் தங்க அனுமதி கோரும் பட்சத்தில், அவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும் எனவும் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தீ)

# புலோலி தெற்கு பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

பருத்தித்துறை, புலோலி தெற்குப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. இரவுநேரக் காவல் கடமையில் ஈடுபடும் விழிப்புக்குழுக்கள், தற்போது செயலிழந்ததைத் தொடர்ந்தே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அண்மையில் புலோலி தெற்கில் வசிக்கும் பாடசாலை அதிபரின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் - நித்திரையிலிருந்த பெண் ஒருவரின் சங்கிலியை அறுக்க முற்பட்ட சமயம், அவர் எழுந்து கூக்குரலிடவே சங்கிலியின் ஒரு பகுதியைப் பறித்துக்கொண்டு தப்பியோடிவிட்டார்.

இதேவேளை, அயலிலுள்ள வீடுகளிலும் கொள்ளையிட முயன்றபோது அயலவர்கள் எழுந்து கொள்ளையர்களைத் துரத்திப்பிடிக்க முற்பட்டவேளை, கொள்ளையர்கள் ஓடித் தப்பிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் மூன்று அல்லது நான்கு கொள்ளையர்கள் ஈடுபட்டதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், அண்மையில் பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதான வீதியில் மந்திகைப் பகுதியில் மாலைவேளையில் வீதியால் சைக்கிளில் சென்ற யுவதி ஒருவரின் சங்கிலியை சைக்கிளில் வந்த திருடன் ஒருவன் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளான். இதனால், இந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். (14)

# கால்நடை வளர்ப்போருக்கு இன்று பயிற்சிக் கருத்தரங்கு

(வடமராட்சி)

கால்நடைகளை ஆரோக்கியமான முறையில் வளர்த்தல் தொடர்பான பயிற்சியும், கலந்துரையாடலும் இன்று காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை புலோலியில் உள்ள அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி கால்நடைகளைச் சிறந்த முறையில் வளர்த்தல், குறைந்த செலவில் உயர்வான உற்பத்தியைப் பெறுதல் தொடர்பான தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய வளர்ப்போருக்கு வழங்கப்படக் கூடிய உதவிகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்படும்.

எனவே வடமராட்சிப் பிரதேச பண்ணையாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார். (14)

# சாதனை நிகழ்த்திய மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களில் சாதனை நிகழ்த்திய சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு, எதிர்வரும் வியாழக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரிசுபெறும் சாதனையாளர் வரிசையில், 2004 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற உயிரியல் பிரிவில் யாழ். புனித பரியோவான் கல்லூரி மாணவன் ச.சஜீந்தன், கணிதப் பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் ச.றமணன், வர்த்தகப்பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் அ.சரத்குமார், கலைப்பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் கு.குருபரன் ஆகியோரும்,

யாழ்.மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரத்தில் 1 ஆம் இடத்தைப்பெற்ற யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி தர்சனா குகதாஸ், 2004 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்ற யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் இ.பிரணவன், தேசிய மட்டத்தில் குண்டெறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவி கு.தர்சினி ஆகியோருக்கும், தமிழ்த்தினப் போட்டியில் தேசிய நிலைப்போட்டிகளில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டவர்களான - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவன் த.கோகில் (வாசிப்பு பிரிவு I), யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி அ.அனுஷானி (கவிதை ஆக்கம் IV), யாழ்.யூனியன் கல்லூரி மாணவன் கு.ஜெகதீசன் (இசை தனி IV), வி.ஜீவிகா (இசை தனிV), யாழ்.வேம்படி மகளிர் (இசைக்குழு) குழு I, யாழ்.இந்துக் கல்லூரி (நாட்டிய நாடகம்) யாழ்.யாழ்ப்பாணக் கல்லூரி (வில்லுப்பாட்டு) யாழ்.ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (நாடகம்) யாழ்.தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி (தமிழ் அறிவு) ஆகியனவற்றுக்கே சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

இதேவேளை க.பொ.த உயர்தரம், சாதாரண தரம், 1 ஆம் இடத்தைப்பெற்ற மாணவர் தெரிவு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாகவே தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தீ)

அரசியல் கட்டுரை... கே.ரீ.கணேசலிங்கம்

# மீண்டும் போருக்கான நகர்வுகளையே சாத்தியப்படுத்த முனையும் அரசியல் யதார்த்தம்

**போர்நிறுத்தக் காலத்தைப் பயன் படுத்தி அதிகளவான ஆயுத திறனையும், ஆளணியையும் பெருக்கியுள்ள சிறிலங்கா அரசாங்கம், வெளிப்படையாக போருக்குத் தயாராவதையே காட்டுகின்றது. இப்போர் தயார்படுத்தலுக்கு சர்வதேச நாடுகளின் ஆயுத சந்தைகளும் உதவிகளும் அரசுக்கு கிடைத்துள்ளது. போர் நிறுத்த உடன்பாட்டிலும் அதன் பின்பு நிகழ்ந்த பேச்சுக்களின் போதும், இராணுவத்தின் முதன்மை முன்வைக்கப்படாத போதும் அரசு மறைமுகமாகப் போரை தயார்படுத்திவிட்டது.**

இலங்கையின் சமாதானம் ஆபத்தான பாதையை நோக்கி நகர்வதாக தமிழ், சிங்கள மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் அண்மைக்காலமாக பிரஸ்தாபித்து வருகின்றன. தமிழ் மக்களும் போரைப்பற்றியே அதிகம் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களையோ வற்புறுத்தல்களையோ செவிசாய்க்காது, அரசு போரைத் தொங்குவது அல்லது சமாதானத்தை நீடிப்பதென்ற இரண்டு பக்கப் பார்வைக்குள் நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழர் தரப்பும், சிங்களத்தரப்பும் வெளிப்படையாக இல்லாவிட்டாலும், போரே தமக்குச் சரியான தீர்வைத் தரும் என்ற போக்கில் செயற்படுவது புலனாகின்றது. இலங்கை அரசு சமாதானத்தைப் போருக்கான தயார்படுத்தலாக எவ்வாறு பாவித்துள்ளது என்பதனை இங்கு நோக்குவோம்.

இலங்கை இராணுவத்தின் போர்த்திறன், ஆயுத பலத்திலும் ஆளணியிலுமே எப்போதும் தங்கியிருந்தது. ஆளணியின் மனோபலத்தில் காணப்பட்ட பலவீனமே, அதன் பல தோல்விகளுக்குக் காரணமாக அமைந்திருந்தது. இலங்கை இராணுவம் இலட்சியமற்ற கூலிப் படையென்பதை மறுத்துவிட முடியாது. இதனால் விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்பாடு எட்ட முன்பிருந்த அரசாங்கம், ஆனையிறவு முகாமை இழந்தது. இதன் பின்பு ஏற்பட்ட மாறுதல் புரிந்துணர்வுக்கான சாத்தியப்பாட்டை ஏற்படுத்தியது. அதன் கீழ் இலங்கை இராணுவத்தின் பலமெனக்கருதப்பட்ட ஆளணியிலும், போர்த்திறனான ஆயுத தளபாடத்திலும் பயிற்சியிலும் ரணில் அரசும், அதன்பின்பு பதவி ஏற்ற புதிய அரசும் கவனம் செலுத்தின. அதனடிப்படையில் ஏற்பட்ட மாறுதலைப் பார்க்கும்போது இலங்கை இராணுவம் போருக்குத் தயாராவதை காணலாம்.

அமெரிக்க சிரேஷ்ட இராணுவ ஆய்வாளர் **Brian Blodgett** வெளியிட்டிருக்கும் **Sri Lanka`s Military The Search For Mission** என்ற நூல் மேற்குறிப்பிட்ட எண்ணக்கருவை ஆதாரப்படுத்துகின்றது. குறிப்பாக போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடும் போதிருந்த இராணுவத்தை விட, அதன் ஆயுத ஆளணிப் பலத்தில் இரண்டு மூன்று மடங்கு அதிகரிப்பினை அடைந்துள்ளதெனக் கூறுகின்றார்.

இராணுவம் 2002 பெப்ரவரி மாதத்தில் (புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத் திடப்பட்ட போது) 95 ஆயிரமாகக் காணப்பட்ட சிப்பாய்களின் எண்ணிக்கை, தற்போது 1,18,000 ஆக அதிகரித்துள்ளது. இதுமட்டுமன்றி 40 க்கு மேற்பட்ட தாக்குதல் டாங்கிகளைக் கொள்வனவு செய்துள்ளது. அதில் 18 டாங்கிகள் பிந்திய தரத்தைச் சேர்ந்தவை. இது மூன்று மடங்கு அதிகரிப்பைக் காட்டுகின்றது. மேலும் ஆட்டிலறிவகைத் தாக்குதல் பலம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 2001 இல் 97 ஆக இருந்த ஆட்டிலறிகள் 2002 இல் 187 ஆக அதிகரித்துள்ளது. இவற்றுடனீ கவச வாகனங்களையும் இராணுவம் கொள்வனவு செய்துள்ளது. இது 2002 உடன் ஒப்பிடும் போது 70 சதவீத அதிகரிப்பைச் இராணுவம் பெற்றுள்ளதென கூறமுடியும். துருப்புக் காவிகள் மட்டும் 158 இலிருந்து 204 ஆக உயர்ந்துள்ளது.

விமானப் படைப் பிரிவின் அதிகரிப்பு பாரியளவில் நிகழ்ந்துள்ளது. **M1-35** வகை மற்றும் **M1-24** வகை உலங்குவானூர்திகள் என இருபது வானூர்திகள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. துருப்புக்களை, உணவு மற்றும் இடமாற்றும், ஆயுதங்களைப் பரிமாற்றம் செய்ய 10 க்கு மேற்பட்ட வான்கலங்களைத் தருவித்துள்ளது. **M1-35** வகை உலங்குவானூர்திகள் கடலிலும், தரையிலும் பாவனைக்கு உட்படுத்தக்கூடியவையாக உள்ளன. இது 2002 விட இரட்டிப்பு அதிகரிப்பாக உள்ளது. மேலும் ஆளணியைப் பொறுத்தவரை 2002 இல் 10 ஆயிரமாக இருந்த விமானப்படையினர் தொகை 19300 ஐ எட்டியுள்ளது. இது ஏறக்குறைய 90 சதவீதமான அதிகரிப்பைக் காட்டுகின்றது.

மூன்றாவது இலங்கையில் கடற்படையின் அதிகரிப்பு 80 சதவீதமாக உளளது. குறிப்பாக கடற்கலங்கள் , சாதாரண வகைக் கப்பல்கள் எனப் பல புதிய வகைத் தாக்குதல் சாதனங்களைக் கடற்படைக்கு தருவித்ததுடன் 18 ஆயிரமாக இருந்த கடற்படையின் அளவை 20,600 ஆக அதிகரித்துள்ளது. கடற்படையை முதல்தர சேவையாக இராணுவம் இணைத்துக் கொண்டிருப்பதுடன் அதற்கேற்ப ஆயுத தளபாடக்கொள்வனவிலும் கவனம் செலுத்தி வருகின்றது.

எனவே போர்நிறுத்த காலத்தைப் பயன் படுத்தி அதிகளவான ஆயுத திறனையும், ஆளணியையும் பெருக்கியுள்ள அரசாங்கம், வெளிப்படையாக போருக்குத் தயாராவதையே காட்டுகின்றது. இப்போர் தயார்படுத்தலுக்கு சர்வதேச நாடுகளின் ஆயுத சந்தைகளும் உதவிகளும் அரசுக்கு கிடைத்துள்ளன. போர் நிறுத்த உடன்பாட்டிலும் அதன் பின்பு நிகழ்ந்த பேச்சுக்களின் போதும், இராணுவத்தின் முதன்மை முன்வைக்கப்படாத போதும் அரசு மறைமுகமாகப் போரை தயார்ப்படுத்திவிட்டது.

விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுப்பதற்கு இராணுவத்தைத் தயார்படுத்தியுள்ள இலங்கை அரசு, சர்வதேசத்தை சமாதானப் படுத்தவும், சமாதான விரும்பி எனக்காட்டவும் சில தந்திரங்களைக் கையாண்டு வருகின்றது. குறிப்பாகப் பேச்சுக்கள் எனக்கூறிக் கொண்டு இராணுவத்தைப் பலப்படுத்தியிருப்பதுடன் அதற்கான நடவடிக்கைகளில் பிராந்திய சர்வதேச மட்டத்தில் தொழிற்படுகின்றது.

மேலும் இராணுவ அதிகரிப்பில் குறிப்பாகக் கடற் படையின தும், விமானப் படையினதும் வளர்ச்சியில் அரசாங்கம் அதிக கவனம் எடுத்துள்ளது. விடுதலைப் புலிகளின் கடற்புலிகளையும், விமானப் படைப்பிரிவையும் எதிர்கொள்வதே அடுத்தகட்டப் போரின் பரிமாணம் என்பதை இலங்கை அரசு உணர்ந்துள்ளது போல் தெரிகிறது. வெளிப்படையாக இல்லாதுவிட்டாலும் மறைமுகமாக, அவ்வாறான தந்திரத்தையே கையாள முனைகின்றது. இலங்கை இராணுவத்திலிருந்து எத்தனை வீதமானவர்கள் போரற்ற காலத்தில் தப்பியோடினார்களோ இல்லையோ இவ்வளவு படையினர் புதிதாக இணைந்துள்ளனர். இது அதன் படை நடவடிக்கைக்கான முன்னாயத்தமாகவே உள்ளது. ஒவ்வொரு போரற்ற காலத்தையும் இலங்கை அரசு பயன்படுத்திப் போரை நீடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை போரோ, சமாதானமோ நீடிப்பதே அதன் நோக்கமாக உள்ளது. சமாதானம் என்பது இனனோர் போருக்கான தயாரிப்பாக உள்ளதால் போரும் நீடிக்கிறது, சமாதானமும் நீடிக்கிறது. இரண்டிலும் தமிழ் மக்களின் தனித்துவம், பாதுகாப்புப் பாதிப்படைகின்ற தேயன்றி உசித்மான வளர்ச்சிப்போக்கு ஏற்படவில்லை.

இவ்வாறு குறிப்பிடுவதால் தமிழ் மக்களை விரட்டுவதாகவோ அல்லது அதிர்ச்சிக்குள்ளாக்குவதாகவோ கருதிவிடக்கூடாது. யதார்த்தமாக என்ன மாறுதல் நிகழ்ந்துள்ளது என்பதையே இந்த விடயம் காட்டியுள்ளது. இலங்கை அரசு பல தடவை போரைத் தமிழ் மக்கள் மீது திணித்தது. அத்தகைய திணிப்பை மீண்டும் விரைவாகத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இது பற்றிய விழிப்புணர்வு எமக்கு அவசியம். தமிழ் மக்களைச் சுற்றி எப்படியான நடவடிக்கைகள் நிகழ்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

அமெரிக்கநாட்டு இராணுவ நிபுணர், ஒரு புத்திஜீவி என்பதால் மட்டுமன்றி, இலங்கை அரசாங்கம் எப்படித் தயாரிப்புக்களை மேற்கொள்கின்றது என்பதையே அவரது தகவலூடாகக் கண்டறியமுடிந்தது. அவரே பல தகவல்கள் வெளிவராமல் இருக்கலாம் எனவும் இவை மட்டுமே தமக்குக் கிடைத்தவை என்றும் கூறுகின்றார். எனவே மேலும் பல விடயங்கள் வெளிவராமல், தெரியாமல் இருக்கலாம். அதற்கான சந்தர்ப்பமும், சூழலும் ஏற்படும்போது அவை வெளிவருவதைக் காணலாம்.

எனவே போர் உடனடியாக வெடிக்குமென எச்சரிக்கை செய்வதல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். இலங்கை அரசு சமாதானம் எனக்கூறிக்கொண்டு சாதித்தவை போருக்கான அணுகுமுறைகளேயன்றி வேறு எவையுமில்லை. இதுவே எதிர்காலத்தில் தாக்கத்தை விளைவிக்கக்கூடியவை. சர்வதேசத்தின் முன்பு இலங்கை அரசாங்கம் போருக்குப் போகாது எனவும், சமாதானத்தினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலுகின்றது எனவும் தவறான கணக்குப் போட்டவர்களுக்கு இந்த யதார்த்தம் அதிர்ச்சியாகவே அமையும்.

எனவே போருமற்று, சமாதானமுமற்று, தீர்வுமற்ற தமிழ் மக்களின் அரசியல் யதார்த்தம் மீண்டும் போருக்குரிய நகர்வுகளாகவே சாத்தியப்படுத்த முனைகின்றது. தமிழ் மக்களின் அரசியல் வாழ்வும், விமோசனமும் போருக்குள்ளேயே மூழ்கியுள்ளது. ❄



எம்.ஐ. 35 ரக தாக்குதல் போக்கு வரத்துக் ஹெலி

கல்வியியல்... - எம். சுகந்தன்

# இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தம்

இலங்கையின் கல்வி வரலாற்றில் புதியதொரு திருப்பு முனையாக அமைந்துவிட்ட புதிய கல்விச் சீர்திருத்த அம்சங்கள் 1998 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. அதாவது, கம்பஹா மாவட்டத்தில் அமுலாக்கப்பட்டு, பெறப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் சீராக்கப்பட்டு இலங்கையின் சகல பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதுவரை காலமும் பரீட்சை மையக்கல்வி, ஆசிரியர் மையக்கல்வி, ஏட்டுக்கல்வி, நெட்டுரு செய்து (மனனம்) கற்றல் என்பவற்றில் திளைத்திருந்த மாணவர்களை முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைக்கு அழைத்துச் செல்வதாகப் புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறைகள் காணப்படுகின்றன.

பரீட்சையை நோக்கிய நகர்வில் ஆரம்பக் கல்வியில் புலமைப் பரிசில் பரீட்சையும், இடைநிலைக் கல்வியில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையும் உயர் கல்வியில் பல் கலைக் கழக புகுநிலைப் பரீட்சையாக க.பொ.த உயர் தரப் பரீட்சையும் காணப்படுகின்றன. பரீட்சையில் மாணவர்களது அறிவை மட்டுமே பரிசீலிக்ககூடிய நிலை காணப்பட்டமையால், இந்த நிலையை மாற்றியமைத்து மாணவரது அறிதல் ஆட்சித் திறன்கள், சமூகமயத்திறன்கள், ஆளுமைப் பண்புகள் தொடர்பாகவும் பூரண கவனம் செலுத்தப்பட்டு, அவை விருத்தி செய்யப்படவேண்டும் என்பதே கல்விச்சீர்திருத்த நடைமுறையின் முக்கிய அம்சமாகும். புதிய கல்விச் சீர்திருத்தங்களிலும், புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த. சாதாரணப் பரீட்சை க.பொ.த உயர் தரப் பரீட்சை என்பன தொடர்ந்தும் அமுலில் இருப்பது பற்றிப் பல்வேறு மட்டங்களிலும் இருந்தும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அதாவது 5 ஆம் தரத்தில் மாணவரது பல்வேறுபட்ட திறன்களை அளவிட்டு புலமைப் பரிசில் வழங்க புலமைப் பரிசில் பரீட்சையும், க.பொ.த உயர்தரத்துக்கு புகமுன் க.பொ.த சாதாரண தரத்தில் கற்கும் மாணவனது கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையும், பல்கலைக்கழக அனுமதி வழங்கவும் ஒவ்வோர் துறைசார் நிபுணத்துவம் வாய்ந்த மாணவர்களை தெரிவுசெய்ய க.பொ.த உயர் தரப் பரீட்சையும், தொடர்ந்தும் அமுலில் இருக்கின்றது. ஆயினும் பரீட்சைகள் யாவும் பழைய நிலையில் இருந்து மாறுபட்டு மாணவனது அறிவு, திறன், மனப்பாங்கைப் பரிசோதிப்பதாகவும், அறிவைப் பிரயோகிப்பதாகவும் உள்ளது. இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக புலமைப் பரிசில் பரீட்சை வினாக் கட்டமைப்புக்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறைகள் அறிமுகப் படுத்தப்பட்டதற்கான காரணங்களாக பின்வரும் கல்வி நிலைமைகளைக் குறிப்பிடலாம்.

- ✡ நாட்டின் எழுத்தறிவு வீதம், முற்றாக நீங்காமை. அதாவது 8 வீதம் எழுத்தறிவற்ற மக்கள் காணப்படுகின்றமை.
- ✡ தேர்வுகளில் சித்திகள் மட்டும் கவனம் எடுத்தமை.
- ✡ வெற்றிகர வாழ்க்கைக்கு வேண்டிய அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வலியுறுத்தியமை.
- ✡ பாடசாலைக்குப் போட்டியாக தனியார் கல்வி நிலையங்கள் அதிகளவில் தோற்றம் பெற்றமை.
- ✡ நூற்கல்விக்கும், மனனம் செய்தலுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டமை.
- ✡ கல்வியைப் பெறும் வாய்ப்பில் நகர, கிராம வேறுபாடுகள் மிகுந்து காணப்பட்டமை.
- ✡ கட்டாயக் கல்வியை பெறும் மாணவர்கள் பாடசாலைக்கு வெளியே காணப்பட்டமை.
- ✡ கற்ற கல்வியின் தரத்துக்கு ஏற்ப தொழில் கிடைக்காமையால், புத்திசாலிகளின் வெளியேற்றம் நிகழ்ந்தமை.

பழையன கழிதலும், புதியன புகுதலும் எனும் கருத்துக்கு ஏற்ப பழைய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் இருந்து புதியதொரு கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கு அழைத்துச் செல்வதாக சீர்திருத்திய நடைமுறைகள் காணப்படுகின்றன. சீர்திருத்திய புதிய நடைமுறையின் விசேட அம்சங்கள் வருமாறு

- ✡ மாணவரின் சமநிலை ஆளுமையை விருத்தியுறச் செய்தல்.
- ✡ கற்பித்தல், கற்றல், மதிப்பிடல் எனும் நிலையில் இருந்து மாறி மதிப்பிடல், கற்றல், கற்பித்தல், கற்றல், மதிப்பிடல், கற்பித்தல், கற்பித்தல், கற்றல் மதிப்பிடல் எனும் முழுமைச் செயலொழுங்கைப் பின்பற்றுதல்.
- ✡ கற்பித்தலுக்குரிய இடமாக வகுப்பறையை மட்டும் கொள்ளாது, சுற்றாடலை வினைத்திறனுடன் பயன்படுத்தல்
- ✡ பாடத்துக்கு ஏற்ப பிள்ளை என்ற நிலை மாறி பிள்ளைகளுக்காகவே பாடம் என்ற நிலையை உருவாக்குதல்.
- ✡ அனுபவங்கள், செயற்பாடுகள் மூலம் கற்றல்.
- ✡ வகுப்பறையை பல வழித்தொடர் பாடல் நிகழும் களமாக மாற்றியமைத்தல்.
- ✡ நவீன கற்பித்தல் முறைகளையும், மதிப்பீட்டுக் கருவிகளையும் முறையாகப் பயன்படுத்தல்.
- ✡ தேர்ச்சிமயக் கலைத்திட்டமும், மாணவர் மையக் கற்றலுக்கும் வழி செய்தல்.
- ✡ பாடசாலை மட்டக் கணிப்பீடு இடம்பெறல்.
- ✡ இணைக் கலைத்திட்ட விருப்புக் கலைத்திட்ட நடவடிக்கைகளில் மாணவரை ஈடுபடுத்தல்.

எனவே புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி, மாணவனது பல்துறை சார் நிபுணத்தவத்தை வளர்த்தல் என்பதுவும், மாணவரது சமநிலை கையிலேயே தங்கியுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறைகள் யாவும் ஆசிரியரூடாகவே மாணவர்களைச் சென்றடைகிறது. சீர்திருத்திய நடைமுறைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பவர் ஆசிரியர் ஆவார். கற்றல், கற்பித்தல் சிறப்புற நிகழ்ந்திடவே கட்டுப்பாட்டு வகுப்பறையில், தினம் தினம் பெற்ற கடமையைப் பேணி ஏற்று, நாடு போற்றும் சமூகம் தனை படைப்பது ஒவ்வொரு ஆசிரியரதும் கடமையாகும். ♦♦♦

## மணிக்கு 144 கி.மீ வேகத்தில் ஜப்பானில் வீசிய புயல்காற்று!

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நேற்றுக்காலை மணிக்கு 144 கி.மீ வேகத்தில்காற்று வீசியது. இதுபோல் ரோக்கியோவில் ஒரு நாளும் காற்று வீசியது கிடையாது.

இந்தச் சூறாவளிக் காற்றினால் சிபா என்ற இடத்தில் 32 ஆயிரம் வீடுகளில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது. 460 தொன் எடையுள்ள இரசாயனப் பொருள் ஏற்றிய லொறி இயந்திரத்தை நிறுத்தாமலேயே காற்றில் சுற்றிச் சுற்றி வந்தது.

மரங்கள் முறிந்து ரயில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. 55 விமானங்களின் போக்குவரத்துச் சேவை ரத்துச்செய்யப்பட்டன. இதன்போது காற்றினால் மரங்கள் விழுந்ததில் 14 பேர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பயங்கரவாதிகள் மீதான தாக்குதலால் உலகம் பாதுகாப்பற்ற நிலையிலுள்ளது

## பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு

(லண்டன்)

முரண்பாடுகளுக்கான காரணங்களைச் சரியாகக் கண்டறியாமல், பயங்கரவாதிகளின் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் உலகைப் பாதுகாப்பற்ற நிலைக்குக் கொண்டு சென்றுள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்தார்.

செய்தி ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

உலகம் தற்போது பாதுகாப்பில்லாமல் உள்ளது. இதற்கு ஒரு பகுதியில் நடத்தப்படும் நடவடிக்கையே காரணமாகும். சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நாம் எவரும் கவனமெடுப்பதில்லை. இதுவே உலகில் பயங்கரவாதம் பெருகுவதற்கு முக்கிய காரணமாகும்.



எனவே, இது தொடர்பாக நாம் ஒருபோதும் கதைப்பதில்லை. மாறாக உடனடியாக எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே போராடுகின்றோம். அரசியல் தகராறுகள், சமூக சமத்துவமின்மை தீர்க்கப்பட்டாலே பயங்கரவாதத்துக்கு எதிரான போரை முன்னெடுக்கலாம். ஏன் இளைஞனோ அல்லது யுவதியோ தமது வாழ்க்கையைக் கைவிடுகின்றனர்? இதற்கு அடிப்படைக் காரணம் அரசியல் தகராறு. எனவே, நாம் அவர்களின் கல்வி மற்றும் வறுமை போன்றவற்றுக்கு முதலில் தீர்வுகாண வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை லண்டன் சென்ற முஷாரப் - பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்து கல்வியறிவு மற்றும் வறுமை என்பவற்றுக்கு எதிராக மேலும் போராடவேண்டுமெனவும், இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஆப்கானிஸ்தான் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகள் தொடர்பாகவும் இருநாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலஸ்தீன - இஸ்ரேலியப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்குத் தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்த பிளேயர் - பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்களால் உலகம் பாதுகாப்பில்லாமல் இருக்கின்றதென முஷாரப் தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென பி.பி.ஸி செய்தியாளர் ஜேம்ஸ றொபின்ஸ் தெரிவித்தார்.

# திட்டமிட்டபடி ஜனவரி 30 ஆம் திகதி ஈராக்கில் தேர்தல் நடத்தப்படுமாம்!

## இடைக்கால ஜனாதிபதி தெரிவிப்பு



(பாக்தாத்)

ஈராக்கில் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தாலும் அங்கு திட்டமிட்டபடி ஜனவரி 30 ஆம் திகதி தேர்தல் நடைபெறுமென ஈராக்கின் இடைக்கால ஜனாதிபதி காசி யாவிர் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்த பின்னரே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஈராக்கில் திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் இது நீடித்துச் செல்லுமாக இருந்தால் ஈராக்கில் மேலும் வன்செயல்கள் அதிகரிப்பதுடன் மக்களும் பெரும் துன்பமடைவர். அத்துடன் ஈராக்கில் தேர்தல் ஒத்திவைக்கப்படுமென நாம் நினைக்கவில்லை. இங்குள்ள பிரச்சினைகள் நிச்சயம் தீர்க்கப்படும்.

ஈராக்கியப் படையினர் ஈராக்கின் பாதுகாப்பினைப் பொறுப்பேற்கும் பட்சத்தில் அமெரிக்கப் படைகள் ஈராக்கிலிருந்து ஒருவருடத்திற்குள் வெளியேறிவிடும். இது சிலவேளைகளில் ஒருமாதம், ஆறு மாதங்கள், எட்டு மாதங்கள் அல்லது ஒருவருடம்கூட ஆகலாம். ஆனால், வருடங்கள் ஆகமாட்டாது. நிச்சயம் அது நடக்காது. எனத்தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தானது ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் சபாரி தெரிவித்த கருத்துடன் ஒத்துப்போவதாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர் தனது கருத்தில் ஈராக்கில் தேர்தல் நடத்துவது பிரச்சினைதான் - ஆனாலும், இதனை நடத்த முடியும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பலூஜாவில் மேற்கொண்டு வந்த உதவிப் பணிகளை அங்குள்ள பாதுகாப்பின்மை காரணங்களால் தாம் நிறுத்தி அங்கிருந்து வெளியேறிவிட்டதாக செஞ்சிலுவையின், செம்பிறைச் சங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்கப் படைகளும், கிளர்ச்சிவாதிகளும் தற்போது பலூஜாவின் பல இடங்களில் மோதல்களில் ஈடுபட்டு வருவதாகவும், எனவே, இவ்வாறு இராணுவ நடவடிக்கை இடம்பெறும்வேளை தம்மால் அங்கு உதவிப் பணிகளை மேற்கொள்ள முடியாதென செம்பிறைச் சங்கத்தின் பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



ஆனால், இதனை மறுத்த அமெரிக்கப் படையினர் பலூஜாவிலிருந்து செம்பிறைச் சங்கம் வெளியேறியமையானது அது அவர்களின் தனிபபட்டமுடிவெனவும், பாதுகாப்புக் காரணங்களுக்காக அல்ல எனவும் தெரிவித்தன.

உலக நோக்கு

# 134 நாடுகளில் மரணதண்டனை இரத்துச் செய்யப்பட்டுள்ளது!

(நியூயோர்க்)

உலகில் 134 நாடுகள் தூக்குத் தண்டனை முறையை கைவிட்டுள்ளன. 62 நாடுகளில் அது இன்னும் நடைமுறையில் உள்ளது. 2003 இல் சீனாவில் மட்டும் 5 ஆயிரம் பேர் தூக்கிலிடப்பட்டனர்.

இதுகுறித்து ஐ.நா. அமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கை வருமாறு -

உலகில் மொத்தம் 134 நாடுகள் தூக்குத் தண்டனை முறையைக் கைவிட்டுள்ளன. 84 நாடுகள் முழுமையாக அதை ரத்துச் செய்துள்ளன. 14 நாடுகள் சாதாரண குற்றங்களுக்குத் தூக்குத் தண்டனை விதிப்பதில்லை என அறிவித்துள்ளன. ரஷ்யாவில் தூக்குத் தண்டனை முறையை ரத்துச் செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தூக்குத் தண்டனை அமுலில் உள்ள 32 நாடுகளில் கடந்த 10 ஆண்டுகளாக யாரும் தூக்கிலிடப்படவில்லை. 2003 ஆம் ஆண்டுக்குப் பிறகு 10 நாடுகள் தூக்குத் தண்டனை முறையை கைவிட்டுள்ளன. கசகஸதான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளில் தூக்குத் தண்டனைக்கு ஏற்கனவே பல கட்டுப்பாடுகள் உள்ளன. பூட்டான், சமோவா, பொஸ்னியா, ஆர்மீனியா ஆகிய நாடுகளிலும் கடந்த ஆண்டு முதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

உலகம் முழுவதும் 62 நாடுகளில் தூக்குத் தண்டனை முறை அமுலில் உள்ளது. கடந்த 2003 இல் இந்த நாடுகளில் மொத்தம் 5 ஆயிரத்து 523 பேர் பல்வேறு குற்றங்களுக்காகத் தூக்கிலிடப்பட்டனர். இதில், சீனாவில் மட்டும் 5 ஆயிரம் பேர் தூக்கிலிடப்பட்டனர். ஈரானில் 154 பேர், ஈராக்கில் 113 பேர் தூக்கிலிடப்பட்டனர்.

இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபல பாடகர் உயிரிழக்க காரணமான

# அமெரிக்க வீரரை ஒப்படைக்குமாறு ரோமானிய அரசாங்கம் கோரிக்கை

(லண்டன்)

ரோமானிய தலைநகரான புக்காறஸ்ரில் அமெரிக்கக் கடற்படை வீரர் ஒருவர் ஓட்டிச்சென்ற காரில் மோதுண்டு அந்த நாட்டு பிரபல துள்ளிசைப் பாடகரான பீற்றர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, ரோமானியாவைவிட்டு வெளியேறிய அமெரிக்கக் கடற்படை வீரரை தம்மிடம் ஒப்படைக்குமாறு ரோமானிய அரசு- அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

பாடகர் ரியோ பீற்றரைத் தனது காரால் மோதியவேளை அமெரிக்கக் கடற்படை வீரர் மதுபோதையில் இருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகள்மூலம் தெரியவந்ததாக ரோமானியப் பொலிஸார் தெரிவித்தனர்.

அமெரிக்க நிர்வாகம் இது தொடர்பாக முதலில் தமது தனிப்பட்ட விசாரணையை நடத்துமென ரோமானியாவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அமெரிக்கக் கடற்படை வீரரின் பெயர் தெரியாதெனவும் - ஆனால், ரோமானிய தலைநகரிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றியவரெனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்தச் சம்பவத்தையடுத்து ரோமானிய நாட்டிலிருந்து குறித்த கடற்படைச் சிப்பாய் வெளியேறியமையையிட்டு ரோமானிய வெளியுறவு அமைச்சு தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து ரோமானிய வெளியுறவு அமைச்சு தனது அதிகாரி ஒருவரை அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பி ஆட்சேபனையைத் தெரிவித்ததுடன், குறித்த வீரரைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும், அவருக்கான இராஜதந்திரப் பாதுகாப்பினை நீக்குமாறும் கேட்டுக்கொண்டது.

குறித்த கடற்படைச் சிப்பாய் ஓட்டிவந்த காரை வளைவொன்றில் நிறுத்தாமல் திருப்பியவேளை எதிரே வந்த காரில் மோதினாரெனவும், அந்தக் காருக்குள் இருந்த பாடகர் பீற்றர் உயிரிழக்க, கார்ச்சாரதி படுகாயமடைந்ததாகவும் ரோமானிய பொலிஸ் தெரிவித்தது.

இது தொடர்பாக ரோமானிய பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு அமெரிக்கக் கடற்படை தனது பூரண ஒத்துழைப்பை வழங்குமென அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.



இதேவேளை ரோமானிய பாடகர் உயிரிழந்தமையானது அந்த நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அந்த நாட்டு அரச வானொலி அவரது பாடல்களை ஒலிபரப்பியவண்ணமுள்ளது.

# 3, 300 கிலோ சொக்லெட்; கிறிஸ்மஸ் பொம்மைகள்!



(மிலன்)

கிறிஸ்மஸ் திருநாளையொட்டி இத்தாலியைச் சேர்ந்த 32 சமையற் கலைஞர்கள் - 3 ஆயிரத்து 300 கிலோ சொக்லேட்டைப் பயன்படுத்தி 4 ஆயிரத்து 500 மணி நேரத்தில் கிறிஸ்மஸ் பொம்மைகளை உருவாக்கியுள்ளனர்.

குழந்தை யேசு, ஆடுமேய்ப்பவர்கள், ஆடுகள், கிராம மக்கள், மலைகள், குகைகள், என எல்லாவற்றையும் சொக்லேட்டில் உருவாக்கியுள்ளனர்.

19 அடி 8 அங்குல அகலத்துக்கும் 9 அடி 10 அங்குல உயரத்துக்கும் கிறிஸ்மஸ் பொம்மைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 100 பொம்மைகள் சொக்லேட்டில் தயாரிக்கப்பட்டிருந்தன. நெப்பிள்ஸ் நகரில் அந்தச் சொக்லேட் கிறிஸ்மஸ் பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அன்டோனியோ கேஸ்டால்டோ என்ற சமையற் கலைஞர் தலைமையில் சிற்பிகள், தச்சர்கள், பெயின்ரர்கள் ஆகியோர் தங்கள் திறமையை சொக்லேட்டில் வெளிப்படுத்தியுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# அனுராவின் உரை தொடர்பாக ரவிராஜ் எம்.பி கடும் விசனம்!

(கொழும்பு)

பொலனறுவ மாவட்டம் மன்னம்பிட்டியில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க அண்மையில் ஆற்றிய உரை - யுத்தத்திற்கான முன்னறிவிப்பு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான என்.ரவிராஜ் நேற்று நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய விசேட உரையின் போது குற்றம் சுமத்தியுள்ளார்.

"அரசாங்கம் சண்டைக்கும் தயார், சமாதானத்திற்கும் தயார்" என அனுரா பண்டாரநாயக்க ஆற்றிய உரை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் விசேட உரையாற்றினார். அந்த உரையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

"1994 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க, தமிழ் மக்களை மறந்து விட்டார் என்று ரவிராஜ் தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்த வேளையில் ஆளும் கட்சி பிரதம அமைப்பாளரான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, சபையில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க இல்லாத காரணத்தினால் அவருக்குப் பதிலாக தனக்கு ரவிராஜின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிகக வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டார். இருப்பினும் தொடர்ச்சியாக இருதரப்பும் விவாதிப்பதற்கு இடமளிக்க கூடாது என்றும் அவர் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த வி.ஜே.மு. லொக்குபண்டார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவுக்கே பதிலளிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்றார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் இலங்கை மின்சார சபை தொடர்பாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்திடம் வாய்மூல வினாவிற்காக சமர்ப்பித்த கேள்விகளை இறுதி நேரத்தில் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

அரசாங்கத்தில் உள்ள நேர்மையான ஒரு அமைச்சரிடம் குறிப்பிட்ட வினாவை எழுப்பி அவருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்த தான் விரும்பவில்லை என மகேஸ்வரன் இதற்குக் காரணம் கூறினார்.

இதனை ஆட்சேபித்த ஆளும் கட்சி பிரதம அமைப்பாளர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே-

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்தின்படி பதில் எதிர்பார்க்கும் கேள்விகளை வாபஸ் பெறமுடியாது என்றார்.

இந்த நேரத்தில் குறுக்கிட்ட மகேஸ்வரன் -

நான் கேட்கும் கேள்விளுக்கு தான் பதில் கூறப்போவதில்லை என அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேயினால் கூற முடியுமானால, அதுபோல் கேள்விகளைக் கேட்பதும் கேட்காமல் விடுவதும் என்னைப் பொறுத்தது எனக்கூறினார்.

இதற்கிடையில், ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலியே ரத்ன தேரர் உரையாற்றுகையில் -

மேல் நீதிமன்ற நீதிபதிசரத் அம்பேபிட்டியவின் கொலைச் சூத்திரதாரியான பொட்டு நௌபரைக் காப்பாற்றுவதற்கு சில பொலிஸ் உயர் அதிகாரிகள் முயற்சிக்கிறார்கள் என்று குற்றம்சுமத்தினார்.

அவரை இந்த நாட்டைவிட்டு தப்பியோட வைப்பதற்கு அந்தக் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிகள் திட்டம் போடுகிறார்கள் என்று குறிப்பிட்ட அவர் - சிறைச்சாலையில் இந்தச் சந்தேக நபருக்கு சில வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# உருக்குலைந்த நிலையில் திருமலையில் சடலம்!

(திருகோணமலை)

திருகோணமலை உப்புஊறல் கடற்கரையில் உருக்குலைந்த - அழுகிய நிலையில் 35 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

மேற்படி சடலம் நிர்வாணமாகக் காணப்பட்டது. முகம் மற்றும் ஏனைய உறுப்புக்கள் உருக்குலைந்து காணப்பட்டதால் சடலத்தை அடையாளம் காணமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. தலையின் முற்பகுதி மொட்டையாகவும் பின் பகுதியில் ஓரளவு மயிர் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற திருகோணமலை மாவட்ட குற்றவியல் நீதியாளர் தமிழ்கவி, சடலத்தை நேரில் பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் உருக்குலைந்த நிலையில் உள்ளதாலும், பாதுகாப்பதற்கு வசதி இல்லாததாலும் சடலத்தை உடனடியாக புதைக்குமாறு உத்தரவிட்ட நீதியாளர், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மூதூர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேற்படி சடலம் தொடர்பாக தகவல்களைப் பெறவிரும்புவோர் மூதூர் பொலிஸாருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டில் மகேஸ்வரன் எதிர்த்து வாக்களிப்பு!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டு விவாதத்தின் பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்தபோதும் - அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் எதிர்த்து வாக்களித்தார்.

ஏற்கனவே வெளிவிவகார அமைச்சின் நிதியொதுக்கீட்டு விவாதத்தின்போதும் மகேஸ்வரன் எதிர்த்து வாக்களித்திருந்தார்.

நேற்று பாதுகாப்பு அமைச்சின் நிதியொதுக்கீட்டு விவாதத்தின் போது எதிர்த்து வாக்களித்தது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் பி.பி.சிக்கு பேட்டியளிக்கையில் -

வெளிநாட்டு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகிய இரண்டுக்கும் எதிர்த்து வாக்களிப்பது தமிழர்களாகிய எங்களுக்கு முக்கியமாக இருக்கிறது. நான் இதை எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிவித்தேன்.

எமது மக்களின், எமது இனத்தின் நலனைப் பாதிக்கின்ற இந்த இரண்டு அமைச்சுக்களுக்கான நிதியொதுக்கீட்டுக்கு எதிர்த்து வாக்களிக்கவேண்டியதை தெளிவாகக் கூறினேன்.

இந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சானது சமாதானத்தைக் கொண்டுவருகின்ற எந்த அர்ப்பணிப்பையும் செய்தத் தவறியுள்ளது. வடக்கு - கிழக்குப் பகுதியில் நடைபெற்றுவந்த மாவீரர்நாள் நிகழ்வுகளில் அசம்பாவிதங்களை கட்டவிழ்த்துவிட்டு, ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை படையினரும் பொலிஸாரும் மேற்கொண்டனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழருக்கெதிரான தொடர் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன. தமிழர்களாகிய நாங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு ஆதரவாகவோ, அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விலகியிருப்பதோ உகந்ததல்ல என எமது கட்சியின் உயர்மட்டத்துக்கு தெளிவாகக் கூறினேன்.

இது சம்பந்தமாக எனது நடவடிக்கையை உயர்பீடம் சாதகமாகப் பரிசீலிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

நாட்டில் 70 வீதமானோர் சிங்கள மக்கள். அவர்கள் தென்னிலங்கையில் இருக்கும் பெரும்பான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலும், அவர்களுடைய 99 வீதமானோர் அங்கம் வகிக்கின்ற வகையிலும் அவர்களின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டே அவர்கள் ஆதரவாக வாக்களித்தார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணி-ஜே.வி.பி. கூட்டரசாங்கத்தில் முற்றுமுழுதாக தமிழர் விரோதப் போக்குகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குகின்ற வகையில், அவர்களின் பிரதேசங்களில் இருக்கும் படையினர் விலகி, நிரந்தரமாக வாழும் நிலையை தற்போதைய அரசாங்கம் செய்வதாக இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## எஸ்.பி. மீதான வழக்கு இன்று தீர்ப்பு வெளியாகும்!

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படும்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலுள்ள 5 பேர்கொண்ட நீதிபதிகள் குழுவே இந்த விசாரணைகளை மேற்கொண்டுவந்தது.

## புலிகள்...

அதற்கு பிரபாவின் உரையில் சூசகமாக ஏதாவது கூறப்பட்டதாகவோ அல்லது புலிகள் யுத்தத்துக்குத் திட்டமிடுகிறார்களா என்பதுபற்றியோ நோர்வேக்குத் தெரியாது என தூதுவர் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

இதயைடுத்து அமைச்சர் மங்கள சமரவீரவுடன் கலந்தாலோசித்துவிட்டு சொல்ஹெய்மைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பிரட்ஸ்கரிடம் கேட்ட அதே கேள்வியைக் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த சொல்ஹெய்ம் பிரபாகரனின் உரையில் சூசகமாக என்ன கூறப்பட்டுள்ளது என்பதைக் கூறக்கூடிய ஒரே ஒரு பொறுப்பான நபர் பிரபாகரன்தான். அதுபற்றி நாம் கருத்துக்கூறமுடியாது என்று நினைக்கிறேன் என்றார்.

நீங்கள் புலிகளுடன் தொடர்பு கொண்டு அதுபற்றி அறியத்தருவீர்களா? என்றார் ஜனாதிபதி.

அப்படியானால் இலங்கைக்கு வரமுன்னர் லண்டனுக்குச் சென்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து இதுபற்றி பேசுகிறேன் எனது வரையறைக்குட்பட்டு என்னால் இயன்ற வரை முயன்று பார்க்கிறேன் என்றார் சொல்ஹெய்ம்.

இதேவேளை, வடக்கு - கிழக்கில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்துப்பேச கிளிநொச்சிக்குச் சென்ற தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் ஊடாகவும் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் பிரபாவின் மாவீரர் நாள் உரை குறித்து அரசு ஒரு அறிக்கையை விடுத்தபோதும், ஜனாதிபதியின் கருத்துக்களை நேரடியாகக் கேட்டறியவே சொல்ஹெய்ம் தற்போது இலங்கை வருகிறார் என்று கூறப்படுகிறது.

# மட்டக்களப்பில் கடும் மழை 25 கிராமங்கள் வெள்ளத்தில்!

## நூற்றுக்கணக்கான மக்கள் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 25 கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டன.

மண்முனை, தென் எழுவில் பற்று, போரதீவுப்பற்று, மண்முனைப் பற்று, வாகரை, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்முனை, தென் மேற்கு பட்டிப்பளை பிரதேசத்தில் 5850 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் எஸ்.அமரநாதன் தெரிவித்தார். அவர்களில் பெரும்பாலானோர் நண்பர்கள் உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மேலும் கொக்கட்டிச்சோலை, மணற்பிட்டி வீதியில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

மண்முனை தென் எழுவில்பற்றுப் பிரதேசத்தில் இரண்டு வீடுகள் இடிந்து விழுந்ததுடன், 291 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகப் பிரதேச செயலர் பாஸ்கரன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயத்தில் வெள்ளநீர் உட்புகுந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர்கள் இருவர் கொழும்பில் கைது!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தை அண்டிய பிரதேசத்தில் தமிழர்கள் இரு[illegible] நேற்றுமுன்தினம் மாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கே.சண்முகராஜா, கே.மகேந்திரன் ஆகிய இருவருமே கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, விசாரணையின் பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

**வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் என்பது வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் கௌரவத்தையும் சமூக உரிமைகளையும் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டுள்ள ஒன்று.**

# சவுதியில் அமெரிக்க...

பகுதியை நோக்கி கிளர்ச்சிவாதிகள் குண்டுத் தாக்குதல்களை நடத்திய பின்னர் அலுவலகப் பகுதிக்குள் உள்நுழைந்து தாக்குதலை மேற் கொண்டதாக சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டதாகவும் -

சவுதிப் படையினரின் தாக்குதலில் மூன்று கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டு, இருவர் கைதுசெய்யப்பட்டதாகவும், நான்கு சவுதிப் படையினரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இந்தத் தாக்குதலில் பேருவளையைச் சேர்ந்த இலங்கையரான அப்துல் ஜபார் மொகமட் ஜெரோஸ் என்பவர் காயமடைந்துள்ளார். இவர் சவுதியிலுள்ள ஒட்டமா கன் ரீ என்ற கம்பனியில் பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றியவராவார்.

இதனைத் தவிர அமெரிக்க அலுவலகத்தில் பணியாற்றிய 18 பேரை கிளர்ச்சிவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். இவர்களில் நான்கு இலங்கையர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சவுதிக்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் சாகிட் அன்சார் தெரிவிக்கையில்-

ஜெட்டாவில் தாக்குதலுக்குள்ளான அமெரிக்க அலுவலகத்தில் இரண்டு இலங்கையர்கள் சாரதிகளாகவும் மற்றைய இருவரும் வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் தொடர்பான விபரங்களை அறிய -

றியாத்திலுள்ள அமெரிக்க கவுன்ஸிலருடன் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

## இடைக்கால...

"தென்பகுதி மக்கள் பெற்றுள்ள அனைத்து உரிமைகளும் வடக்கு - கிழக்கு மக்களுக்கு அவசியமானவை என்பதை தெற்கு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

"பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

UNIT

உலக முன்னணி நிறுவனங்களான COMPAQ, DELL, IBM INTEL, PERX மற்றும் ASROCK நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் உலகத்தரம் வாய்ந்த கணனிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் கொழும்பு விலைக்கே யாழில் கிடைக்கச் செய்து வழங்குகின்றோம்.

3 வருட முழு உத்தரவாதம்

அதிசயிக்கத்தக்க கொழும்பு விலையில்

விசேட சலுகைப் பொதிகள்

புதிய Multimedia Pentium IV கணனிகள் 39,500/= முதல்
மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

புதிய Multimedia Compaq Pentium III மற்றும் Pentium II கணனிகள் 13,000/= முதல்
ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

கல்வி நிலையங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் முகவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.

அதிசயிக்கத்தக்க சலுகைகள்
இச்சலுகைகள் ஒரு சில தினங்கள் மட்டுமே

Hybrid Boost, Hypher Thread, Dual Monitor

சகல கணனி உதிரிப்பாகங்களும் அதிசயிக்கத்தக்க சலுகை விலையில்

347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.